www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 27 | 01 ஆனி 1996 | விலை: ரூபா 7.00

# இந்திய அரசியல் மாற்றம் இங்கே நீதியான தீர்வுக்கு அடிகோலுமா?



உலகத்தின் மிகப்பெரிய ஜன நாயக நாடான இந்தியா வில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்துள் ளது. எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமை யால், யார் அரசமைப்பது என்ற விடயம் நீண்ட இழுபறியில் இருந்து, மிக அதிக ஸ்தானங்களைப் பெற் றுக்கொண்ட வலதுசாரி இந்துத்துவ பாரதீய ஜனதாக் கட்சியை அரச மைக்குமாறு இந்திய ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மா அக்கட்சியின் தலைவரைக் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் பாரதீயஜனதாக் கட்சியின் தலைவர்களுள் ஒருவ ரான அடல்பிஹாரி வாஜ்பாய் இந்தி யாவின் பிரதமராக பதவிப் பிரமா ணம் செய்துள்ளார். மே 31ம் திக திக்கு முன்னர் பாராளுமன்றத்தில் இவர் தனது கட்சிக்கான பெரும் பான்மையை நிருபிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள் ளார்.

இதற்காக ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டி பல பிராந் தியக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதுடன், இந்திய தேசி யக் காங்கிரசில் இருந்தும் ஒருபகுதி யினரின் ஆதரவை திரட்ட முயற் சித்து வருகின்றார்.

இதேசமயம் மதச்சார்பற்ற இந்தி யாவில் இந்துத்துவ கட்சியை ஆட்சி அமைக்க அனுமதிப்பது அங்கிருக் கக் கூடிய சிறுபான்மை மக்களுக்கு விரோதமாக அமையும் என்பதால், பாராளுமன்றத்தின் முதல் அமர்வி லேயே பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியை கவிழ்த்து விடுவதென்ப தில் ஏனைய கட்சிகள் மும்முரமாக உள்ளன.

மே 31இல் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்து இறக்கப்பட் டால் ஜனதா தள், இடதுசாரி முன்

எல்.கே. அத்வானி, அடல்பிஹாரி வாஜ்பாயி, பால் தாக்கரே



னணி, இந்திய தேசியக் காங்கிரஸ் மற்றும் பிராந்தியக்கட்சிகளின் ஆத ரவுடன் ஆட்சியமைக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஏற்கனவே 318 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக் கு ஆதரவாக இருப்பதாகவும், கர் நாடக மாநிலத்தின் முதலமைச்ச ரான தேவகௌடாவே தமது பிரத மர் எனவும் இவை அறிவித்துள் ளன.

எவை எப்படி இருந்த போதும், பிராந்தியக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தக் கட்சியாலும் மத்தியில் ஆட்சி அமைக்க முடியா தென்ற சூழ்நிலையே உள்ளது.

இந்நிலையில் பிராந்தியக் கட்சி களில் அதிக எண்ணிக்கையான ஆசனங்களைக் கொண்டுள்ள தி.மு.க., தமிழ் மாநில காங்கிரஸின் பங்களிப்பு கணிசமானதாக இருக்கு மென்று நம்பலாம். தமிழகத்தில் இவர்களது கூட்டமைப்பு 39 ஆச னங்களைக் கொண்டுள்ளது.

இந்நிலையில் ஈழத் தமிழரின் பிரச்சினையில் இந்தியாவின் பங் களிப்பு எவ்வாறு இருக்கும் என்பதே ஈழத் தமிழரின் இன்றைய முக்கிய கேள்வியாகும்.

ஏற்கனவே ஈழத் தமிழர் பிரச்சினைக் குத் தீர்வு காணுமுக மாக திரு. ராஜீவ்காந் தி அவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கி இருந்தார். இத னை நடைமுறைப்படுத்த ஒருலட்சத்துக்கு மேற்பட்ட இந்தியத் துருப்புக்களும் இங்கு அனுப்பிவைக் கப்பட்டது.

ஆனால் புலிகள்-பிரேமதாசா கூட்டுச் சதியால் இவ்வொப்பந்தம் நிர்மூலமாக்கப்பட்டது. அதுமாத்திர மல்லாமல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் சென்னையில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டார்.

புலிகளின் இச்செயலைத் தொ டர்ந்து இந்திய அரசு புலிகளுக்கெதி ரான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது மட்டுமல்லாமல், இலங்கைத் தமிழரின் அழிவுகளை யும் கண்டும் காணாமல் இருந்து வந்தது.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவ ளித்தால் அது புலிகளுக்கு ஆதர வாகிவிடுமோ என்ற ஐயத்தால் இந்தி யாவும், இந்தியாவில் இருக்கக்கூடிய பல கட்சிகளின் தலைவர்களும் கூட இலங்கை விடயத்தில் ஒதுங்கி யே இருந்து வந்தனர்.

ஆனால் திருமதி சந்திரிகா குமா ரதுங்கா அவர்கள் இலங்கையில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும், இந்தியாவுடன் மிகவும் நெருக்க மான ராஜரீக தொடர்புகளை ஆரம் பித்தார். ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாசா காலத்தில் இந்தியாவை ஒதுக்கி அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகளின் நண்பனாக இலங் கை இருந்து வந்தது. அந்த நிலை யில் மாற்றத்தை உருவாக்கி, இந்தி யாவை இலங்கை தனது நண்பனாக் கிக் கொண்டது.

இதனால் புலிகளை ஒடுக்குவ தற்கு இந்தியாவும் பல உதவிகளைச் செய்து வந்ததாக பரவலாக நம்பப் படுகின்றது. முக்கியமாக கடல் பிராந்தியத்தில் புலிகளின் நடவடிக் கைகளைக் கட்டுப்படுத்த இந்திய உதவி வந்ததாக கூறப்படுகின்றது.

இதனால் புலிகள் மிக மோசமா கப் பாதிக்கப்பட்டதுடன், இலங் கைக் கடற்படையும் வடபகுதியில் இருக்கும் தனது துருப்புக்களுக்கு இலகுவாக பொருட்களைகொண்டு செல்ல முடிந்தது. இதன் மூலமே இன்று இலங்கைப் படை களும், முழு யாழ் குடாநாட்டையும் தமது கட்டுப்பா ட்டுக்குள் கொ ண்டுவர முடிந் துள்ளது.

ஆனால் இந்தியாவில் மாறியுள்ள அரசியல் சூழ்நிலைகள், இவற்றில் ஏதாவது மாற்றத்தை கொண்டு வருமா என்பதே இன்றுள்ள மிகப் பெரிய கேள்வியாகும்.


தமிழ்க முதல்வராக் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள், தமது முதலாவது உரை யிலேயே தமிழ் மக்கள் கொல்லப் படுவதை கண்டித்துள்ளதுடன், இலங்கைத் தமிழ் மக்களுக்கு அவர்கள் விரும்பியவாறு ஓர் கௌ ரவத் தீர்வு ஏற்பட தான் மத்திய அரசை வற்புறுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

கடந்த 5 வருடத்துக்குப் பின்னர் தமிழக முதல்வர் விடுத்துள்ள இச் செய்தியானது மிகவும் முக்கியத்து வமானதாகும்.

புலிகளை விரட்டி யாழ் குடா நாட்டை தனது ஆதிக்கத்துள் கொண்டு வந்துள்ள இலங்கை அர சாங்கம் அரசியல் தீர்வு தொடர்பாக ஏனோதானோ என்ற மனோநிலை யிலேயே இயங்கி வருகின்றது.

அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டமும் தமிழரின் அபிலாசை களை பூர்த்தி செய்யக்கூடிய ஒன் றல்ல என்பதுடன், இதனைக் கூட தென்னிலங்கையில் புலர் எதிர்த்தும் வருகின்றார்கள். இந்நிலையில் எமது பிரச்சினைக்கு நீதியானதும் நிரந்தரமானதுமான தீர்வு ஏற்பட வேண்டுமாயின், மீண்டும் இந்தியா வின் மத்தியஸ்தம் தவிர்க்க முடியாத தாகும்.

இலங்கைப் பிரச்சினை தீர்விற்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் மத்தி யஸ்தமும் தேவை என்பதை ஈ.பி. ஆர்.எல்.எப். ஆரம்பம் முதலேயே வலியுறுத்தி வருகின்றது. இன்றைய நிலையில் இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இங்கு ஓர் நீதியானதீர்வு ஏற்பட முடியாது என்ற சூழ்நிலை யே தோன்றி வருகின்றது.



## உள்ளே....

இனிய தமிழ் மக்களே!
செயலாளர் நாயகம் மடல் 03
போராட்டத்தை மறுக்க புது உத்தி
விதுரன் கட்டுரை 04
நியாயமான அபிலாஷைகள்...
ரி. சிறீதரன் 06
தமிழ் மக்களின் தேவை என்ன?
சாணக்கியன் கட்டுரை 07
கூட்டணியில் கூட்டணி வேண்டும்
ஜெர்மனியிலிருந்து சாரதி 08
மன்னாரிலிருந்து....
சொலமன் தேசிங்கு 10
ஜனநாயகச் சூழலைக் கொண்டுவர...
உள்ளமுறுத்துரையர் 11
வசதிகளோடு எல்லாம் முடிவதில்லை 12

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## தீர்வுத்திட்டம் எங்கே போகின்றது?

யாழ்குடாநாடு முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டதாக, அரசு மீண்டும் மீண்டும் அறிவிக்கின்றது. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சமாந்தர அரசொன்றை நடாத்தி வருவதாக குறிப்பிட்ட புலிகள் குடாநாட்டில் இருந்து பெருமளவு வெளியேறியுள்ளனர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இயக்கங்கள், இந்திய ராணுவம், ஈ.பி.ஆர்.எல்.எப். பின்னர் இறுதியாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்குடாநாடு இன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் போயுள்ளது.

குடாநாட்டில் வாழும்மக்களின் வெளியிடங்களுக்கான போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் யாவும் கடல் மார்க்கமாகவே எடுத்துச் செல்லப்படுகின்றது. 80வீதமான வீடுகள் முழுமையாகவோ அல்லது அரைகுறை யாகவோ அழிக்கப்பட்டுள்ளது. மக்கள் 10-12 மணிநேரம் உணவுப் பொருட்க ளுக்காக வரிசையில் நிற்க வேண்டிய நிலை. விவசாயம், கடற்தொழில் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்த நிலை. இவற்றை எல்லாம் சீர்செய்ய அரசு வெளிநாடுகளில் உதவி வேண்டி விண்ணப்பித்துள்ளது.

அதேசமயம் மாவீரர் குடும்பம் என அடையாளம் காணப்பட்ட குடும்பங்களில் இருக்கக்கூடிய 12-30 வயதுக்கிடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இரா ணுவத்தினால் அழைத்துச் செல்லப்பட்டு பிரத்தியேக முகாம்களில் வைக்கப் படுவதாகவும் செய்திகள் வருகின்றன. இவை தவிர கற்பழிப்பு, கொலை போன்றவையும் சிறியளவிலாவது நடந்து வருகின்றது. இவற்றை அவதானிக்க-கட்டுப்படுத்தக் கூடிய சிவிலியன் நிறுவனங்களோ அல்லது தொண்டர் ஸ்தாபனங்களோ அங்கில்லை என்பது பெரும் குறைபாடாகும்.

இதேசமயம் இதுவரையும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க அரசு விரும்புகின்றதேயன்றி, ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அங்கு சென்று, தமது அரசியல் வேலைகளைச் செய்யவோ அல்லது மக்களுக்கு நிவாரண உதவி செய்யவோ அரசு அனுமதி யளிக்க விரும்பவில்லை. வெண்தாமரை இயக்கத்தினூடாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை அங்கு ஸ்தாபிக்க விரும்புகின்றதேயன்றி மாற்றுத் தமிழ் கட்சிகள் அரசியல் தலைமைத்துவத்தை கொடுப்பதை அரசு விரும்பவில்லை என்றே தோன்றுகின்றது. அரசு, தான் முன்வைத்துள்ள தீர்வை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றதே அல்லாமல், அதில் உள்ள குறைபாடுகளை மக்களுக்கு விளங்கப்படுத்த அனுமதியளிக்க விரும்பவில்லை என்பதே உண்மை.

இன்று யாழ் குடாநாட்டை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர், புனர்வாழ்வு நிவாரணம் பற்றி பேசுகின்றதே தவிர அரசியல் தீர்வை அரசு மறந்துவிட்டதாகவே தோன்றுகின்றது. பல்வேறு அமைச்சர்களும் யாழ்ப்பாணம் விஜயம் செய்வதும், யாழ்ப்பாணத்தை புனர்நிர்மாணம் செய்கின்றோம் என்பதும் இவற்றை தொலைக்காட்சி, வானொலியில் விளம்பரப்படுத்துவதும் நடைபெறு கின்றதே அல்லாமல், இப்பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாய் தெரியவில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு அனுப்பப்பட்ட அரசின் தீர்வுத்திட்டம் தீண்டுவாரற்று கிடக்கின்றது. தெரிவுக்குழு கூட்டங்களுக்கு கோரம் இல்லாததால் கூட்டங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. ஆனால் ஜனாதிபதியோ இன்னும் 6 மாதங்களில் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவோமென ஜப்பானிலும் சீனாவிலும் இருந்து அறிவிப்புக்கள் விடுக்கின்றார். ஜனாதிபதி அப்படியான அறிவிப்புக்கள் விடுக்கும் அதேசமயம், யாழ்ப்பாணத்துக்கு ஓர் தரைப்பாதையை எற்படுத்த முடியாத நிலையிலேயே அரசு இன்றுள்ளது.

யாழ்ப்பாண நூலக கட்டிடத்தை திருத்துவதும், சாராயம், சிகரட்டை யாழ்ப்பாணம் அனுப்புவதும்தான் இன்றுள்ள முக்கிய பணி என அரசு சிந்தித்தால் அவர்கள் தவறுவிடுகின்றார்கள் என்பதே அர்த்தம். முழுமையான ஓர் அரசியல் தீர்வைக் கண்டு ஓர் ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதுடன், தமது பகுதிகளில் புனர்நிர்மாண, புனர்வாழ்வு வேலைகளைச்செய்ய அப்பகுதி மக்களை அரசு அனுமதிக்க வேண்டும். இன்னும் விரிவாக கூறுவதானால், போரினால் பாதிக்கப்பட்ட தமது பகுதிகள் எவ்வாறு மீளவும் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதும், அதற்கான திட்டங்களை வகுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் அப்பகுதி மக்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். இதற்கு அடிப்படையில் அரசியற் தீர்வும், இதனை ஒட்டி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசும் வட-கிழக்கில் அமைக்கப்பட வேண்டும். இவை இல்லாமல், அரசு ஒரு பகுதியில் யுத்தத்தை தொடர்ந்து கொண்டு இன்னொரு பகுதியில் புனர்நிர்மாணம் பற்றி பேசுவது வெறும் கேலிக்கூத்தாகவே இருக்கும்.

மக்களின் உணவு, இருப்பிடம் போன்ற அடிப்படை விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதால் அதுதான் தீர்வென்றோ, அல்லது வெறும் நிவாரணப் பணிகளுடன் விடயங்கள் முடிந்து விட்டதாகவோ இல்லை. அதுமாத்திரம் அல்லாமல் இராணுவ ரீதியில் தமது கை ஓங்கி விட்டதென்ற நிலையில் தாம் விரும்பும் தீர்வை திணிப்பதையும் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

அரசியல் தீர்வைப்பற்றி பேசிய அரசாங்கம் இன்று இராணுவத் தீர்விலேயே முனைப்பாக உள்ளது. இன்று மிகுதியாக உள்ள வன்னியையும் தனது கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்தால், தாம் கொடுப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென அரசு யோசிக்கலாம். ஆனால், புலிகள் இராணுவ ரீதியாக அடக்கப்பட்டாலும், தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளை வெல்லும்வரை தமது அபிலாஷைகளை நிறைவேற்றும்வரை அவர்களுக்கு கௌரவமான ஓர் தீர்வு கிட்டும் வரை மக்கள் போராட்டங்கள் தொடரும் என்பதை அரசு உணர வேண்டும்.

ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்டு, பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களையும் இழந்த பின்னர், அரசு போடும் பிச்சையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று யாரும் எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் அரசின் இராணுவத் தீர்வும், அவர்களின் நடவடிக்கைகளும் இதையே சுட்டி நிற்கின்றன. எனவே முழுத் தமிழ்ச் சமூகமும் இந்த ஆபத்தை புரிந்து கொள்ள வேண்டு மென்பதுடன், இவ் ஆபத்துக்கெதிராக மக்களை அணிதிரட்டவும் அனைவரும் முன்வர வேண்டும்.

# மே தின விழா



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மே தின விழா இம்முறை திருகோணமலையில் மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. துரைரத்தினம், மத்திய குழு உறுப்பினர் நா. நேசராசா, திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் செ. சூரியமூர்த்தி, நகரசுத்தி தொழிலாளர் சங்கத் தலைவர் காசிநாதர், கூட்டுறவு தொழிலாளர் சங்கத் தலைவர் இரகுநாதன் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் திருமலை பிராந்திய செயலாளர் இ. திலகராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

**வெளிநாட்டு முகவரிகள்:**

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.


P.Fach: 506,
Bern-17,
Switzerland.


படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...





### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

மிகவும் இறுக்கமான பத்திரிகைத் தணிக்கை, பத்திரிகையாளர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ, பொதுமக்களோ போக முடியாதளவிலான கட்டுப்பாடு, இவற்றின் மத்தியில் அரசாங்கத்தின் ரிவிரச-2 தாக்குதலும் முடிவடைந்து ரிவிரச-3 (சூரிய வெளிச்சம்-3) இராணுவத் தாக்குதல் நடைபெற்று வருகின்றது.

வடமராட்சி, தென்மராட்சி உட்பட குடாநாடு முழுவதுமே இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டுக்கும் வெளியுலகுக்குமான தொடர்புகள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எந்த இழப்பும் இல்லை. புலிகள் பின்வாங்கி விட்டனர் என்றும் அரசு கூறிவருகின்றது.

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

**நான் ஏற்கனவே கூறியது போன்று அரசின் அனுமதியின்றி யாரும் போகமுடியாத பிரதேசமாகவே இன்று யாழ் குடாநாடு உள்ளது. மக்கள் மீளக் குடியேறுகின்றார்களா? அவர்களுக்கான வசதிகள் எவ்வாறு உள்ளது? போன்ற எந்தத் தகவல்களையும் பெற முடியாத நிலையே உள்ளது. யாழ் குடாநாட்டில் இருக்கும் தமது உற்றார் உறவினருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் வெளியில் இருக்கும் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக உள்ளார்கள்.**

> “ஒருபுறம் புலிகளின் முட்டாள்தனமான முடிவுகளும்- அதனால் ஏற்படும் அரசியல் இராணுவ பின்னடைவுகளும், மறுபுறம் அரசாங்கத்தின் கபடநாடகம்.... தீர்வுத்திட்டம் தீர்வுப்பொதி என்ற விடயங்கள் யாவும் பின்தள்ளப்பட்டு இன்று இராணுவ முனைப்பே மேலோங்கி நிற்கின்றது”

புலிகளிலும், முக்கியமானவர்கள் பின்வாங்கி வன்னி பெருநிலப்பரப்புக்கு வந்துவிட்டனர். அவர்களுக்கு கூட அங்கு என்ன நடைபெறுகின்றது என்று தெரியுமோ தெரியவில்லை. தங்களின் இழப்புக்களைப் பற்றியோ, மக்களின் இழப்புக்களைப்பற்றியோ புலிகளின் வானொலியில் எந்தச் செய்திகளுமே இல்லை.

ஆனால் சிறீலங்கா இராணுவம் தமிழ் பெண்களை கற்பழித்துக் கொல்வதாகவும், பொதுமக்கள் பாரியளவில் கொல்லப்படுவதாகவும் வெளிநாடுகளில் புலிகள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். வெளிநாடுகளில் அவர்கள் செய்யும் பிரச்சாரத்தை அவர்கள் இங்கு தமது வானொலியில் ஏன் செய்வதில்லை என்ற கேள்வி எழுகின்றது. ஒருவேளை தமது பொய்ப்பிரச்சாரத்தை இங்குள்ள தமிழ் மக்கள் நம்பமாட்டார்கள் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

**சிறீலங்கா இராணுவம்** ஒன்றும் புனிதமான இராணுவமல்ல. உலகின் மோசமான இராணுவங்களில் இதுவும் ஒன்றுதான். இவர்கள் பல கொடிய சம்பவங்களில் ஈடுபட்டதை, இவர்களது பல இராணுவத் தளபதிகளே ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இதற்காக புலிகள் உள்நாட்டில் ஒரு கதையும் வெளிநாட்டில் ஓர் பிரச்சாரமும் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கத்தின் கண்மூடித்தனமான செயல் ஒருபுறம் புலிகள் பொய்ப்பிரச்சாரம் செய்ய வாய்ப்பாக இருக்க, மறுபுறம் யாழ் குடாநாட்டுக்குள் யாரும் புகமுடியாதென்பது அரசின் போக்கின்மீதும் மக்களுக்கு ஐயத்தை ஏற்படுத்தி வருகின்றது.

கடந்த மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி அவர்கள் பேசும்போது மேலதிக விசாரணைக்காக சில இளைஞர்களை வடபகுதியில் இருந்து கொழும்பு கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளார். சில இளைஞர்கள் என்றால் எத்தனைபேர்? அவர்கள் புலிகளா? அல்லது அப்பாவி இளைஞர்களா? இதுபற்றி பத்திரிகைகளில்கூட ஒரு வரிதானும் வாசிக்க முடியாதளவுக்கு பத்திரிகைத் தணிக்கை.

இந்நிலையில் அரசின் பிரச்சாரமே இன்று நடைபெற்று வருகின்றது. இதுதான் எமது ஜனாதிபதியின் ஜனநாயகம்! எமது மக்களைப் பற்றி, எமது குடும்பங்களைப் பற்றி, எமது சொந்தம் பந்தங்களைப் பற்றி நாமே அறிய முடியாத நிலை. வாழ்க ஜனாதிபதியின் ஜனநாயகம்!

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இன்னொரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். புலிகள் தமது யுத்த தளபாடங்கள் மீது கொண்ட அதீத காதலும், தமது இராணுவத்தில் கொண்டிருந்த அதீத நம்பிக்கையும், இன்று அவர்கள் மீதே அவர்களுக்கு கேள்வியை உருவாக்கி இருக்கும்.

ரிவிரச-1இன் போது மக்களை அவர்களது சொந்த மண்ணில் இருந்து 24 மணி நேரத்துக்குள் வெளியேற்றினார்கள். மக்கள் எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக அகதிகளாக வெளியேறினர்.

பெரும்பாலான யாழ்ப்பாணத்து வீடுகள் யாவும் புலிகளால் கொள்ளையடிக்கப்பட்டன. மக்கள் கேட்டபோது, ‘இராணுவம் வந்தால் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விடுவார்கள். ஆகவே நாங்கள் பாதுகாப்புக்கு எடுத்துச் செல்கின்றோம்’ என்று கூறினார்கள்.

இவை எல்லாவற்றையும் செய்துகொண்டு ‘மக்கள் எம்முடன் (புலிகளுடன்) நிற்கின்றார்கள். அரசாங்கத்தின் முகத்தில் கரியை பூசி விட்டார்கள்’ என்று கூறினார்கள். இன்று என்ன நடைபெறுகின்றது? மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் புலிகளை ஏற்கவில்லை என அரசாங்கம் பிரச்சாரம் செய்கின்றது.

**புலிகள் எடுத்த பல மோசமான முடிவுகளில், மக்களை யாழ்ப்பாணம் விட்டு விரட்டியதும் ஒன்று என்பதை இப்பொழுது புரிந்து கொண்டிருப்பார்கள். பல இலட்சங்கள் செலவழித்துக் கட்டிய வீடுகளை இழப்பதற்கு எந்த மனிதன்தான் விரும்புவான்?**

அது மாத்திரமல்ல, பசிக்கு உணவில்லாவிடினும் படுத்துறங்க அவர்களுக்கு ஓர் திண்ணை இருந்தது. அதுவும் வேண்டாம் மரநிழலில் படுத்துக் கொள் என்பதை எந்த மனிதன்தான் ஏற்றுக்கொள்வான்? இவற்றை புரிந்துகொள்ள முடியாத புலிகள் எவ்வாறு அவர்களுக்கான ஓர் போராட்டத்தை நடாத்த முடியும்?

‘நாம் தனி நிர்வாகம் நடத்துகின்றோம், நாம்தான் ஒரேயொரு சக்தி, எம்முடன் மாத்திரம்தான் பேச வேண்டும் என்று கூறியவர்கள் இன்று என்ன கூறப்போகின்றார்கள்?

‘குடாநாடு போனாலும் கிழக்கு எமது கட்டுப்பாட்டிற்குள் வந்துகொண்டிருக்கின்றது’ என புதுக்கதை சொல்ல ஆரம்பித்துள்ளார்கள். ஈழப் போராட்டம் -2 இல் கிழக்கைத் துறந்துதான் இவர்கள் வடக்குக்கு வந்தார்கள்.

மொத்தத்தில், இவர்களது கொள்கைகள் முடிவுகள் யாவும் மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது வெறும் புலிகள் என்ற இயக்கத்தை மாத்திரம் பாதித்தால், அதில் யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால் அவர்களது கொள்கைகள், முடிவுகள் யாவும் ஒரு இனத்தையே பாதிக்கின்றது; அவர்களது போராட்டத்தையே பாதிக்கின்றது. இவற்றை இன்னும்கூட புரிந்து கொள்ளாமல் இருப்பது தமிழ் மக்களின் துர்அதிர்ஷ்டமே.

இவர்களின் முட்டாள்தனமான முடிவுகளால் எமக்கிருந்த ஒரே நட்பு சக்தியான இந்தியாவைப் பகைத்துக் கொண்டார்கள், சிறீலங்கா அரசுக்கெதிராகப் போராடிய பல தமிழ் இயக்கங்களையும் கொலை செய்து குவித்தார்கள். பேச்சுவார்த்தைகளை குழப்பி, சர்வதேசமட்டத்தில் ஓர் பயங்கரவாதஅமைப்பு என்ற பெயரை ஏற்படுத்திக் கொண்டார்கள். இன்று, தாமும் பலவீனப்பட்டுப்போய் வேறொருநாடு மத்தியஸ்தம் வகித்தால் தாம் பேசத் தயார் எனக் கோரிக்கை மீது கோரிக்கை விடுக்கின்றார்கள்.

ஆனால் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் ஒப்புதல் இன்றி யாரும் இப்பிரச்சினையில் தலையிட முடியாது என்பதைக் கூட இன்னும் புரிந்துகொள்ளாமல், இன்னும் இந்தியாவையே விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ராஜீவ் காந்தியை கொலை செய்தது போதாதென நரசிம்மராவையும் கொலை செய்ய 95இல் இவர்கள் முயற்சித்ததாக அமெரிக்க உளவுப் பிரிவு கூறுகின்றது.

### அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இவ்வளவும் நடைபெறுகின்றது, ஆனால் நீங்கள் இன்னும் பேசாமடந்தையாகவே உள்ளீர்கள். ஒருபுறம் புலிகளின் முட்டாள்தனமான முடிவுகளும்-அதனால் ஏற்படும் அரசியல் இராணுவ பின்னடைவுகளும், மறுபுறம் அரசாங்கத்தின் கபடநாடகம்.... தீர்வுத்திட்டம் **தீர்வுப்பொதி என்ற விடயங்கள் யாவும் பின்தள்ளப்பட்டு இன்று இராணுவ முனைப்பே மேலோங்கி நிற்கின்றது.**

**இனிமேல் தான் தமிழ்மக்களுடன் பேசப் போவதாக ஜனாதிபதி கூறுகின்றார்.** எவ்வாறு பேசப்போகின்றார் என்பது அவருக்கே வெளிச்சம்.

ஆனால் நிச்சயமாக ஒன்று மாத்திரம் உண்மை. கிடைத்த மாகாணசபையும் கைவிட்டு போய்விடுமோ என்ற சூழ்நிலையே உருவாகி வருகின்றது. தான் கொடுப்பவற்றை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற போக்கே அரசு மட்டத்தில் அதிகரித்து வருகின்றது. இவற்றைப் பார்த்துக்கொண்டு எதுவுமே நடக்காத மாதிரி இருக்கப் போகின்றோமா? அல்லது எமது உரிமைகளுக்காக நாம் குரல் கொடுக்கப் போகின்றோமா?

புலிகளும் இராணுவமும் எம்மைக் கொன்றொழித்து விடுவார்கள் என நாம் உயிருக்கு பயந்தால், எம்மால் எதையுமே சாதிக்க முடியாமல் போய்விடும். இராணுவத்தால் புலிகளை அழிக்கலாம் அல்லது பலவீனப்படுத்தலாம். புலிகளும் தமக்கெதிரானவர்கள் எனக் கருதுவோரை கொலை செய்து குவிக்கலாம். ஆனால் உங்கள் போராட்டத்தை நீங்களே கையில் எடுத்தால், உங்களை யாராலும் அழித்துவிட முடியாது.

எனவே எமது கோரிக்கைகள் வெல்ல வேண்டுமாயின், எமக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டுமாயின், மக்கள் எல்லோரும் ஓரணி திரளுவோம், எமது கோரிக்கைகளுக்காக நாங்கள் போராடுவோம். ●

---

## நாடும் நடப்பும்



புத்தரும் வந்து போனதாக ஒரு வரலாறுண்டு....
போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும்
வந்தனர் போயினர்...
பிரிட்டீசும் வந்தது போனது
எல்லாரும் அள்ளியும் அழித்தும் அழிந்தும் சென்றனர்!
இந்தியாவும் வந்தது போனது
போப் ஆண்டவரும் வந்தார் போனார்
அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும்
வரவேணும் எண்டும் சொல்லுகினம்
சீனாவும் கரிசனைப் படுவதாகவும்
இந்தியா மீண்டும் வரும் எண்டும் சொல்லுகினம்...!
ஆனா இங்க
மனுசரைக் கொல்லுற
யுத்தம் மட்டும் நிக்கிறதாத் தெரியேல்ல!
சமாதானம் - வந்திட்டுது, வந்துகொண்டு,
வரும் எண்டும் சொல்லுகினம்!
எல்லாத்தையும் எல்லாரும் சொல்லலாம்....
ஆர் வந்தாலென்ன போனாலென்ன
எங்கட உரிமையளை
எங்கட பொடியளே மறுக்கிற வரையில
எங்களுக்கு
சமாதானமும் இல்லை சாந்தியும் இல்லை...!

- எஸ். லெனின், திருகோணமலை

படிப்பகம்

www.padippakam.com



# போராட்டத்தை மறுக்க புது உத்தி...

**தமிழ் தரப்பிற்கு இன்று ஏற்ற பிரதிநிதித்துவம் இல்லை என்று அரசு தரப்பில் காட்ட முற்படுவது தமிழ் மக்களின் போராட்டத்தை நிராகரித்துவிடும் போக்காகும்**

**- விதுரன்**

புலிகள் பிரிவினைக்காக போராடுகிறார்கள், சமஷ்டி ஆட்சிக்கு தயார் என்று சொன்னாலும் அவர்கள் அதற்கு தயாரில்லாதவரை அவர்களுடன் பேசி இனப்பிரச்சினையை தீர்ப்பது இயலாது என்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதே. அவ்வாறே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினர் தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கிறதா? என்ன பிரச்சினை? என்று கேட்கிறார்கள். அவர்களை இணங்கச் செய்தும் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதே யதார்த்தம்.

எனவே இந்த இரண்டு தரப்பு நிலைப்பாடுகளிலுமிருந்து இறங்கிவர சித்தமாயிருப்பவர்கள் மட்டுமே இனப்பிரச்சினையை சமாதானமாக தீர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இவர்களால் மட்டுமே நாட்டுக்கும் மக்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கித் தரவும் முடியும்.

## யுத்தத்தின் பின் தீர்வென்பது இனவாதிகளின் கருத்து

அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வுக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கிறது. அதிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி பூரணப்படுத்துவதற்கான யோசனைகளை தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஆனால் இரண்டு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் அறுதியானதும் இறுதியானதுமாக இருக்க முடியாது. இதிலும் கூட இரு தரப்பாரும் விட்டுக்கொடுக்க வேண்டிய விவகாரங்கள் இருக்கலாம். விரிவான கலந்துரையாடல்கள் மூலமே ஓர் இறுதி முடிவை எய்துதல் சாத்தியம்.

இருப்பினும் இன்று சமாதானத்துக்கான யுத்தம், தமிழ் மக்களை விடுவிப்பதற்கான யுத்தம் என்று சொல்லிக் கொண்டே யுத்தம் தொடர்கிறது. இது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினர் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முன்வைத்துள்ள ஓர் திட்டம் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

யுத்தத்தில் புலிகளை அழித்தொழித்த பின்னர்தான் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேச வேண்டும் என்பது அவர்கள் தெரிவித்துள்ள யோசனை. எனவே அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் அவர்களை திருப்திப்படுத்துவதாகவே அமையும்.

## அபிலாசைகளுக்கு விரோதமாக திருத்தங்கள் ஐதாகும்

யுத்தத்தில் வெற்றிபெற்ற பின் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை வழங்க தயாராக இருந்தாலும், அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால், இன்றைக்கு அரசின் தீர்வுத் திட்டத்திற்கு பெரும்பான்மையினர் மத்தியில் இருக்கும் எதிர்ப்பைக் காட்டிலும் அதிகமான எதிர்ப்பை அரசு சந்திக்க வேண்டியே ஏற்படும்.

இதனால் மேலும் மேலும் தீர்வுத் திட்டத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு விரோதமாக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம். தீர்வு யோசனைகளை அமுல்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையும் கூடத் தோன்றலாம். இதுகுறித்து அச்சம் தமிழர் தரப்பிற்கு ஏற்படுவது நியாயமானதே.

யார் எதிர்த்தாலும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்போம் என்று சொல்லி வரும் அரசு, இன்றைக்கு யார் எதிர்த்தாலும் இனப்பிரச்சினைக்கு நியாயமான-பூர்த்தி செய்யப்பட்ட தீர்வுத் திட்டம் ஒன்றினை முன் வைத்த பின் அதனை நடைமுறைப்படுத்த தடையாய் இருப்பவர்களை, அதற்கு ஆதரவான சக்திகளுடன் இணைந்து அரசியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் எதிர்கொள்வதே நியாயமான, சிறந்த வழி.

## தமிழ்மக்களின் தேவை சொன்னால் கட்சிகளோடு அரசுக்கேன் கோபம்?

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்வோம். குறைநிறைகள் ஒருபுறமிருக்க, முழுமையான-பூரணப்படுத்தப்பட்ட தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. கால விரயமும், இழுத்தடிப்புக்களும் தவிர்க்கப்பட்டது. உரிமை கேட்டு போராடிய அத்தனை தமிழ் போராளி அமைப்புக்கள், கட்சிகளையும் முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இணக்கம்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இடையில் ஒப்பந்தத்தை மீறிய புலிகளுடன் தீர்வை அமுல்படுத்துவதற்காகவே யுத்தம் தொடுக்கப்பட்டது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில், ஒப்பந்தத்தின் உருவாக்கத்திலும்; அமுலாக்கத்திலும் குறைபாடுகள், தவறுகள் நேர்ந்ததாக பல்வேறுவிதமான விமர்சனங்கள் உண்டு. ஆனால் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்சங்களும் இன்றைய அரசியல் தீர்வு முயற்சியில் புறக்கணிக்கப்பட்டு வருவதை காணமுடிகிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு திட்டவட்டமான திட்டம் ஒன்று வகுக்கப்படும் முன், அதுபற்றி அனைத்து தரப்பினரினதும் கருத்துக்களை அறியும் முயற்சிகள் மேற்கொள்வதாக சொல்லிக் கொண்டிருக்கும் அரசாங்கம், விவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே தமிழ் மக்களது குரல்வளையை பிடித்துக் கொண்டிருக்கிறது.

## நியாயமான தீர்வின் மூலமே புலியமைப்பு காலாவதியாகும்

எல்லோரையும் திருப்திப் படுத்தக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் சாத்தியமில்லை என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இது விளங்கிக் கொள்ளப்பட முடியாத ஒரு விடயமில்லை. ஆனால் தமிழர் தரப்பை திருப்திப் படுத்துவதில்தான் தீர்வுத்திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

அரசியல் தீர்வின் மூலம் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரமுடியும் என்று நம்புகின்ற, ஜனநாயக வழிமுறைகளை ஏற்றுக்கொள்கின்ற தமிழர் தரப்பின் ஒரு பகுதியினரையாவது அது திருப்திப்படுத்தித் தானே ஆக வேண்டும். புலிகளின் கோரிக்கைகளும் அதற்காக நடத்தப்படும் யுத்தமும் அவசியமற்றது என்ற எண்ணத்தை, முன் வைக்கப்படும் தீர்வு ஏற்படுத்தவும் வேண்டும்.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தோ, தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவித்துவரும் அவலங்கள் குறித்தோ தமது எண்ணத்தை தெரிவிப்பதற்கு தமிழ் கட்சிகளுக்கு வாய்ப்புத் தரப்படுவதில்லை என்று தமிழ்கட்சிகள் நீண்டகாலமாக முறையிட்டு வருகின்றன.

## தனியான நல்லிணக்க அமைச்சும் தீர்வுக்கான தெரிவுக்குழுவும்

இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர இனவிவகார நல்லிணக்கஅமைச்சு என்று தனியான அமைச்சு ஒன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அமைக்கப்பட்டிருந்த போதும் இந்த நிலையே நீடிக்கிறது. பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தீவிரம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிற அளவிற்கு இனவிவகார நல்லிணக்க அமைச்சு என்ற தனியான இந்த அமைச்சு இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்காக ஆற்றி முடித்த பங்கு பணிகள் குறிப்பிட்டு சொல்லும்படி இல்லை.

1996 மே மாதம் 10ம் திகதி பாராளுமன்ற தெரிவுக்குழு தமிழ்கட்சிகளை சந்தித்து, அக் கட்சிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகள், திருத்தங்கள் குறித்து விளக்கங்களை பெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் அறிவிக்கப்பட்டபடி அந்தச் சந்திப்புகள் கூட இடம் பெறவில்லை.

## அரசுக்குத்தான் தெரியுமாம் தமிழ்மக்களின் அபிலாஷை

இனப்பிரச்சினைக்கு சமாதானமாக பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வு காண இதய சுத்தியுடன் முன்வந்த அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் யுத்தம் புரிய நிர்ப்பந்தித்துவிட்டார்கள் என்று கூறிவரும் ஜனாதிபதி, ஜனநாயக வரைமுறைகளுக்குள் நின்று தீர்வுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டி, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை தமிழ் கட்சிகள் ஒன்றாக சேர்ந்து வலியுறுத்த ஆரம்பித்ததும், தீர்வுத்திட்டம் தொடர்பாக நேரடியாக தமிழ் மக்களிடம் பேசப்போகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களிடம் ஜனாதிபதியோ அல்லது வேறு எவருமோ தீர்வுத் திட்டம் தொடர்பாக நேரடியாக பேசுவது நல்லதுதான். ஆனால் தீர்வு தொடர்பாக தமிழ் கட்சிகள் முன்வைத்த யோசனைகள் திருத்தங்களோடும் அரசு இணக்கத்துக்கு வர முடியவில்லையா என்பதைத் தெரிவிப்பது அவசியம். அதனைத் தெரிந்து கொள்வது, அடுத்து தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் பேசப் போகிறவர்களுக்கு அவசியம்.

சமாதானத்திற்காகவே யுத்தம், அரசியல் தீர்வின் மூலமே இனப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்று கூறிவரும் அரசாங்கம் ஜனநாயக வரைமுறைகளுக்குள் நின்று தமிழர் தரப்பின் அபிலாஷைகளை வலியுறுத்திவரும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க தவறி வருவது, அதன் நோக்கத்தை சந்தேகிக்கும் நிலைக்கு தமிழ் கட்சிகளை தள்ளிவருகிறது.

## பிடிக்காதது பேசினால் விலகுவதில் புலி போலத்தானா அரசு தரப்பும்?

புலிகளின் ஜனநாயக விரோதப் போக்குகளால்-பலவந்தங்களால் நாம் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக நேர்ந்தபோதும், இன்னும் ஆயுதம் தாங்கி நிற்கும் புலிகளும் அடக்கி ஒடுக்கப்பட்டு விட்டால் எந்த சிறீலங்கா அரசாங்கமும் ஜனநாயக முறைப்படி எமது உரிமைகளை வழங்க முன்வராது என்பது மட்டுமல்ல, எம்மை மேலும் துன்புறுத்தவும் தயங்கமாட்டார்கள் என்று ஏற்கனவே தமிழ் மக்களுக்கு இருந்துவரும் சந்தேகத்தை ருசுப்படுத்துவதாகவும் வலுப்படுத்துவதாகவுமே இந்த நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே புலிகள், 'ஜனாதிபதி சந்திரிகாவும் நம்பிக்கைக்குரியவரல்ல' என்பதை தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதனை மறுத்து வந்தவர்கள் இதர தமிழ்க் கட்சிகள்.

புலிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக, ஜனாதிபதியையும் அவரது அரசையும் நம்பிக்கைக்குரியதல்ல என்று காட்ட முற்பட்டது போலவே, இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதில் உறுதியாய் உள்ளதாக தெரிவிக்கும் ஜனாதிபதிக்கு, தமிழ்க் கட்சிகள் நேர்மையற்றவை என்று காட்ட வேண்டிய தேவை ஏன் வந்தது என்ற கேள்வியும் தமிழ் கட்சிகள் மத்தியில் எழுந்துள்ளது.

## அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பானேன்?

தமிழர் விடுதலைக் கூட்டணி, தனக்கு வாக்களித்தபடி நடந்து கொள்ளவில்லை என்பதற்காக தமிழ் கட்சிகள் அனைத்துமே நேர்மையில்லாதவை என்ற பொருள்படும்படி ஜனாதிபதி கருத்து தெரிவித்திருப்பதும் தமிழ் கட்சிகளை சங்கடப்படுத்தியுள்ளது.

திருமதி சிறிமணி அத்துலத்முதலி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர் ☞

---

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட வடபகுதி மக்களுடன், அந்த யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தையில் பிரவேசிப்பதே அரசாங்கத்தின் உத்தேசம்.

- ஜனாதிபதி (வீரகேசரி-03.05.96)





அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை நேரடியாகவே தமிழ் மக்களுடன் கதைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகிறார்.

- அனுருத்த ரத்வத்த (வீரகேசரி-16.05.96)

அரசியல் தீர்வு குறித்து விளக்கமளிக்கக் கூடிய சந்தர்ப்பம் இதுவல்ல. அதற்கான மனோநிலையும் அவர்களுக்கு இல்லை.

- அனுருத்த ரத்வத்த (வீரகேசரி-18.05.96)

படிப்பகம்

www.padippakam.com

களில் ஒருவர். அவரும் அவரது கட்சியும் இனப்பிரச்சினை தொடர்பாக தெரிவித்து வரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அதுவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் நிலைப்பாடாக விளங்கிக் கொள்வது ஏற்புடையதாகுமா?

## சிறிமணி கட்சி போல செய்ய தமிழ்க் கட்சிகள் நினைக்கவில்லை

அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தி தமிழ் கட்சிகள் தீர்வுத்திட்டம் தொடர்பாக கருத்துக்களை தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவில்லை என்பதும் ஒரு குற்றச்சாட்டு.

'எம்மைப் பொறுத்தவரையில் சாத்தியமான வழிகளில் இதனை செய்திருக்கிறோம்–செய்கிறோம், இன்னும் விரிவாக மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் எமக்கு மாறுபாடு இல்லை. ஆனால், இது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கம் எமக்கு வழங்கும் உத்தரவாதங்கள், அல்லது அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து எமக்கு ஏற்படும் நம்பிக்கைகளுடன் நேர்விகித தொடர்புடையது. நம்பிக்கை வளரும்போது எமது செயற்பாடுகளும் விஸ்தரிக்கப்படும்' என ஈ.பி.ஆர்.எல்.எப். தரப்பில் கூறப்படுகிறது.

தமக்கே திருப்தியளிக்காத ஒரு விடயத்தை தமிழ் கட்சிகள் பொதுமக்களிடம் எடுத்து செல்லும்போது எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும். 'இந்த அரசுக்கு ஆதரவாக பேச வேண்டியதில்லை. தீர்வுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்' என்று தெரிவிக்கப்படுவது போல பிரச்சாரங்களை மேற்கொள்வது, அரசியல் தீர்விற்கு எதிரான நிலைப்பாடுகளை

“ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி என்று சொல்லிக்கொண்டு, அந்த இனப்பிரச்சினை காரணமாக போராட்டத்தில் இறங்கிய சக்திகள் அனைத்தையுமே புறக்கணிப்பதும், ஒரு தரப்பின் பலம் சிதைக்கப்படுவதும் பிரச்சினையை நியாயமாக தீர்க்கும் அக்கறையுள்ளவர்களின் நேர்மையான அணுகுமுறையாகாது. போராட்டத்தை மழுங்கடித்து பணியவைப்பதும், பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் இணங்கச் செய்வதும் ஒன்றல்ல. ”

தோற்றுவிக்கவே உதவும். அது யுத்தத்தை நோக்கி, புலிகளை நோக்கி மக்களை தள்ளுவதற்கு ஒப்பானது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகளே இதற்கு சிறந்த உதாரணம். எனவே இதனை செய்யாமல் தவிர்ப்பதுவும் கூட, அரசாங்கம் மேற்கொண்டுவரும் தீர்வு முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற நேர்மையான சிந்தனையின் வெளிப்பாடே.

## போராட்டத்தை மழுங்கடித்து பணியவைத்தல் தீர்வாகாது

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி என்று சொல்லிக் கொண்டு, அந்த இனப்பிரச்சினை காரணமாக போராட்டத்தில் இறங்கிய சக்திகள் அனைத்தையுமே புறக்கணிப்பதும், ஒரு தரப்பின் பலம் சிதைக்கப்படுவதும் பிரச்சினையை நியாயமாக தீர்க்கும் அக்கறையுள்ளவர்களின் நேர்மையான அணுகுமுறையாகாது. போராட்டத்தை மழுங்கடித்து பணிய வைப்பதும், பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் இணங்கச் செய்வதும் ஒன்றல்ல.

தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய இளைஞர்களின் போராட்டம் முழுவதையும் கொச்சைப்படுத்தி, போராட்டத்தை மழுங்கடித்து பணியவைப்பது இன்று சாத்தியமானதாக கூட இருக்கலாம். ஆனால் அதுவே நியாயமான அரசியல் தீர்வாக ஆகிவிடாது.

புலிகள் தமது விருப்பங்களை முழுத் தமிழ் மக்களின் விருப்பமாக காட்ட முனைந்தார்கள். முழுத் தமிழ் மக்களும் தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவாய் உள்ளதாகவும் காட்ட முற்பட்டார்கள். யதார்த்தத்தை புரிந்து கொள்ளத் தவறியதால் இன்று அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கிறார்கள்.

அரசாங்கமும் தனது விருப்பங்களையே அனைத்து தமிழ் மக்களின் விருப்பமாக காட்ட முனைந்துநிற்கிறது. இதற்காக தனது அதிகார பலத்தையும் பிரச்சார பலத்தையும் ஒருங்கே பயன்படுத்தி வருகிறது.

## வெறும் பிரச்சார பலத்தினால் மக்களை ஈர்த்துவிட முடியாது

ரிவிரச–1 இராணுவ நடவடிக்கையின் போது இன அழிப்பு இடம்பெறுவதாக தெரிவித்தார்கள், வலிகாமம் பகுதி மக்களை புலிகள் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர நிர்ப்பந்தித்தார்கள் என்பதை மறைத்து, வலிகாமம் பகுதி மக்கள் புலிகளின் பின்னே அணிவகுத்து சென்றுவிட்டதாக புலிகளும், புலிகளுக்கு சார்பானவர்களும் எழுதினார்கள், பேசினார்கள், அதனை தமது வெற்றியாகவும் கொண்டாடினார்கள்.

புலிகளின் சிறப்பான நிர்வாகத்தின் கீழ் வன்னிப் பெருநிலத்தில் அவர்கள் உறுதி குன்றாது உற்பத்திகளில் ஈடுபட தொடங்கி விட்டார்கள், புதுவாழ்வை ஆரம்பித்துள்ளார்கள் என்று எமக்கு தெரிவித்த பயணக் கட்டுரையாளர்களும் உண்டு.

ஆனால் பெரும்பான்மையான தமிழ் மக்களின் மனநிலை என்ன என்பது இன்று தெளிவாகிவிட்டது. இத்தனைக்கும் பின்னால் இதே வகைப்பட்ட நடவடிக்கைகளில், வெறும் பிரச்சாரத்தில் அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதை காணும்போது வேதனையே மிஞ்சுகிறது. மக்களை சமாதான தீர்வின்பால் ஈர்ப்பதற்கோ, அவர்களையும் பங்கேற்க செய்வதற்கோ இதுமட்டும் போதாது.

## தமிழ்க் கட்சிகளைச் சிதைத்து பிரச்சினையைத் தீர்க்கும் முறை

புலிகள்தான் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று ஒருசாராரும், புலிகள் உட்பட தமிழர் தலைமைகள் எதுவும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று மற்றொரு சாராரும் இருவேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

புலிகள் தமிழ் மக்களை தவறாக வழிநடத்திச் சென்றுள்ளார்கள், மாற்றுக் கருத்துக்களை ஒடுக்குவதில் முன்னின்றார்கள், உண்மைக்கு மாறாக பிரச்சாரம் செய்வதில் வல்லவர்கள் எனபதனைத்தையும் ஐயந்திரிபற புரிந்துகொண்டு இதற்காக புலிகளை கடுமையாக விமர்சித்து வருபவர்களும்கூட, ஒருவகையில் புலிகளின் ஜனநாயக மறுப்பினாலும், பொய்யான பிரச்சாரங்களினாலும் யாழ் குடாநாட்டு மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போயிருக்கும் தமிழ்கட்சிகள் அனைத்துமே தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட கட்சிகள் என்று நிறுவ முனைவது விசித்திரமாயுள்ளது.

தமிழ் இயக்கங்கள், கட்சிக்ள் புனிதமானவை இல்லை; மோசமான தவறுகளையும் இழைத்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் தனிப்பட அந்த இயக்கங்கள் மட்டுமல்ல, போராட்டத்திற்கும், மக்கள் மத்தியில் இருந்த ஆதரவு குன்றிப் போனது நிஜம்.

இருப்பினும் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யாரர்? அல்லது ஒரு கட்சிக்குள்ள மக்கள் ஆதரவு எத்தகையது என்பது ஒரு ஜனநாயக் சூழலில்தானே நிர்ணயிக்கப்பட முடியும். அத்தகைய ஜனநாயக சூழல் ஒன்று இல்லாத நிலையில் யார் பிரதிநிதி என்ற தேடல் அர்த்தமுள்ளதாகாது.

## மீண்டும் 70களின் நிலைமை நிரந்தரமான தீர்வாகாது

தமிழ் மக்களது எதிர்காலம் நிர்ணயிக்கப்படப் போகும் தருணத்தில், தமிழ் மக்களது கோரிக்கைகளை ஏகோபித்த குரலில் ஒலிப்பது அவசியமான நிலையில்–தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்தை பெற்றுவிட வேண்டும் அல்லது அவ்வாறான ஒரு அடையாளத்தை அடுத்தவர் பெறுவதை தடுத்துவிட வேண்டும் என்று எண்ணி செயற்படாமல், தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய அதிகபட்ச உரிமைகளுக்காக இதய சுத்தியுடன் ஒன்றுபட்டு குரல் கொடுப்பது இன்று தமிழ் கட்சிகள் முன்னுள்ள கடமை.

இத் தருணத்தில், தமிழர் தரப்பில் அரசியல் தீர்வொன்றை ஏற்க தயாராகியுள்ள சக்திகள் தமக்கிடையே உள்ள முரண்பாடுகளை முதன்மைப்படுத்தி, தத்தமது கட்சிகளை முதன்மைப்படுத்தி, சுயநலன் கருதி செயற்பட்டு தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய தவறும் ஒரு தீர்வினை ஏற்றுக் கொண்டு இதுவரைகால தியாகங்கள் இழப்புக்களை வீணடித்துவிடக் கூடாது.

எமது போராட்டத்தில் தூரநோக்கற்ற செயற்பாடுகளாலும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளாலும் நாமும் எமது மக்களும் வீணான துன்பங்கள், இழப்புக்கள், பின்னடைவுகளையும் சந்திக்க நேர்ந்தது. யுத்தத்தில் பாரிய இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்த தமிழ் மக்கள் இன்று அமைதியையும் சமாதானத்தையும் நாடி நிற்கிறார்கள் என்பதும் உண்மை.

ஆனால் அது-இவ்வளவு கால இழப்புக்களையும் வீணாக்கி விடுகின்ற அமைதியும் சமாதானமும் அல்ல. அத்தகைய அமைதியும் சமாதானமும் தமிழ் மக்களுக்கு நீடித்த நிம்மதியை தராது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்வோமாக. ●



தமக்கே திருப்தியளிக்காத ஒரு விடயத்தை. தமிழ் கட்சிகள் பொதுமக்களிடம் எடுத்து செல்லும்போது எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும். 'இந்த அரசுக்கு ஆதரவாக பேசவேண்டியதில்லை. தீர்வுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்' என்று தெரிவிக்கப்படுவது போல பிரச்சாரங்களை மேற்கொள்வது, அரசியல் தீர்விற்கு எதிரான நிலைப்பாடுகளை தோற்றுவிக்கவே உதவும். அது யுத்தத்தை நோக்கி, புலிகளை நோக்கி மக்களை தள்ளுவதற்கு ஒப்பானது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகளே இதற்கு சிறந்த உதாரணம். எனவே இதனை செய்யாமல் தவிர்ப்பதுவும் கூட, அரசாங்கம் மேற்கொண்டுவரும் தீர்வு முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற நேர்மையான சிந்தனையின் வெளிப்பாடே.

# ஆப்பு இழுத்த புலி!

## தாயகம் (கனடா) இதழிலிருந்து....

சில மாதங்களுக்கு முன்னர் யாருமே கற்பனை பண்ணியிருக்க முடியாத நிகழ்வுகள் தற்போது நடந்தேறியிருக்கின்றன. கோட்டையில் கொடியேற்றி வைத்ததுடன் யாழ் நகரத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் இராணுவத்தின்கைக்குள் வந்திருக்கின்றன. குடாநாட்டில் இன்னொரு சமாந்தர அரசாங்கத்தை நடாத்திக் கொண்டிருப்பதாக கூறிய புலிகள் இன்று 'நடமாடும் அரசாங்கம்' என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாத நிலையில் 'இன்னமும் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கவில்லை.' 'யாழ்ப்பாணம் தற்காலிக வீழ்ச்சி' 'ஆட்களில்லாத யாழ்ப்பாணத்தில் கொடியேற்றி என்ன பயன்?' என்று புலிகளின் ஆதரவாளர்கள் ஆளுக்கு ஆள் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 'இராணுவத்தை உள்ளே வர வைத்துவிட்டு புலிகள் நச்சு வாயு அடிக்கப் போகிறார்கள்' என்ற நம்பிக்கை கூட தற்போது வரை பொய்த்துப் போய் விட்டது. யாழ்ப்பாணம் கேந்திர முக்கித்துவம் வாய்ந்ததல்ல, அதனால் தான் தந்திரோபாய ரீதியில் பின்வாங்கினோம் என்று சொல்லாதவரைக்கும் இந்தக் கதைகளை நம்பிக் கொண்டிருக்கலாம்.

இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது ஒருபுறமிருக்க... யாழ்ப்பாணத்தை புலிகள் இதுவரை காலமும் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து வைத்திருந்தார்களா? அல்லது யாழ்ப்பாணத்தை இராணுவம் முற்றுகையில் வைத்திருந்ததா? என்ற கேள்விக்கான பதில் சிக்கலானது. இராணுவத்தை உள்ளே வர விடாமல் புலிகள் எல்லைகளில் தடுத்து நின்றார்கள் என்பது உண்மை. அதேபோல, மக்களும் புலிகளும் எல்லைகள் மூலமாக இலகுவாக வெளியேற முடியாமல் இராணுவம் குடாநாட்டை சுற்றி வளைத்து நின்றதும் உண்மை. இந்த முற்றுகையை உடைப்பதற்காகத்தான் புலிகள் கிளாலிப் பாதையைப் பயன்படுத்தியதுடன் பூநகரி முகாமை கைப்பற்றும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள்.

இறுதியாக 'புலிகளின் அடிமைத்தனத்திலிருந்து தமிழ் மக்களை மீட்க வந்த' இராணுவம் 'சிங்கள இனவெறி இராணுவத்திடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றி' பிரபாகரன், 'மோமீசன் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரேல் மக்களை மீட்டுச் சென்றது போல' கொண்டு செல்ல, கடைசியில் வெறும் யாழ்ப்பாணத்தில் கொடியேற்றிக் கொண்டது.

இந்த கொடியேற்றம் என்பது வெறும் குறியீட்டுத் தனமானது என்பது எங்களில் பலருக்குப் புரிவதில்லை. முன்பு இராணுவம் வெளியேறிய பின்னர், கோட்டையில் புலிகள் கொடியேற்றியதை தமிழீழம் கிடைத்தது போல கொண்டாட முடியும் என்றால்... இம்முறை இராணுவம் கொடியேற்றியதும் இராணுவத்திற்கான வெற்றி என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை என்ன என்ற அக்கறையின்றி கொடியை ஏற்றுவதுதான் தமிழ் மக்களின் போராட்டத்தின் முக்கிய நோக்கம் என்ற பாணியில்தான் அரசும் இராணுவமும் நடந்து கொண்டன. சிங்கள இராணுவம் வெளியேறியதும் கோட்டையில் கொடியேற்றியது தமிழ் மக்களின் உணர்வுகளைக் கிளர்ந்தெழ வைப்பதற்காக என்றால் அதேபோல சிங்கள மக்களின் உணர்வுகளைக் கிளர்ந்தெழ வைப்பதற்கான முயற்சிதான் தற்போதைய கொடியேற்றம். கொடியேற்றமும் கொடியிறக்கமும் தமிழ் மக்கள் வாழ்வில் எந்த முன்னேற்றமான அம்சத்தையும் கொண்டு வரவில்லை. மாறாக, தங்கள் வீடு வாசல்களை இழந்து, பாலஸ்தீன அகதிகள் போல சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்டு, அகதி முகாம்களிலும் வீதிகளிலும் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழர்கள் தங்கள் பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு ஒவ்வாத ஒன்றை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

முன்பு யாழ்ப்பாணத்தில் வீதிகளில் தங்கி சமைத்து உணடவர்கள் மலையகத்திலிருந்து வந்த பிச்சைக்காரர்களே. அவர்களை யாழ்ப்பாணத்தில் விருந்தோம்பிய முறை யாவரும் அறிந்ததே. இன்று எமது மக்கள் வீதியோரங்களில் தடுப்புகள் அமைத்து அதேவிதத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, முஸ்லீம்கள் சில மணிநேர அவகாசத்தில் சொத்துக்கள் பறிக்கப்பட்டு தங்கள் பாரம்பரிய மண்ணில் இருந்து விரட்டப்பட்டபோது எப்படி தமிழ்மக்கள் மௌனமாகஇருந்தார்களோ, அதைப் போல இன்று முழு உலகுமே மௌனமாக பார்த்துக்கொண்டிருக்க, யாழ்ப்பாண மக்கள் சில மணிநேரங்களில் அகதிகளானார்கள். றுவாண்டா போன்ற நாடுகளில் லட்சக்கணக்கான அகதிகள் அருகில் உள்ள நாடுகளுக்கு புற்றீசல் போலப் படையெடுத்ததை நாம் தொலைக்காட்சிகளில் பாத்திருந்தால், எமது மக்கள் பட்ட அவலத்தை கண்முன் கொண்டு வருவது சிரமமானதல்ல.

இதுவரை காலமும் இந்தியா என்ற நம்பிக்கை நட்சத்திரம், தன் குறைபாடுகளையும் மீறி, ஈழத்தமிழர் விடயத்தில் குரல் எழுப்பி வந்தது. 87இல் வடமராட்சித் தாக்குதலின்போது, இந்தியத் தலையீடு பற்றிய அச்சம்தான் அந்த பேரழிவைத் தடுத்திருந்தது. இன்று புலிகளின் புண்ணியத்தால், ராஜீவ் கொலைக்குப் பின்னர், இந்தியா பாராமுகமாக மௌனமாக இருந்து விட்டது. தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவலையை விட, புலிகள் அடிவாங்குகிறார்கள் என்பது இந்தியாவுக்கு மகிழ்ச்சியான விடயமும்கூட, தற்போது தமிழகக்கட்சிகளின் ஆதரவை தலைவர் கோரி கடிதங்கள் போடுவதாக செய்திகள் வருகின்றன. சமுத்திரத்தில் அமிழ்ந்து போகின்ற மனிதனுக்கு கையில் கிடைக்கும் எந்த துரும்பும் நம்பிக்கை நட்சத்திரம்தான். வை.கோ, ராமதாஸ், நெடுமாறன்போன்ற எந்த பொறுப்பும் இல்லாத எதிர்க்கட்சிகாரர்கள் மக்களின் உணர்வுகளைக் கிளப்புவதற்காக எந்த கோஷமும் போடலாம். தாங்கள் தனிமைப்பட்டுவிடக்கூடாதே என்பதற்காக ஆளும் கட்சியும் தி.மு.கவும் கைகோர்த்துக் கொண்டு பந்த் நடத்தலாம். இதனால் எந்தவித பாதிப்பும் இலங்கைத் தமிழர் நிலையில் ஏற்படப்போவதில்லை. இந்தியப் பத்திரிகைகளின் கருத்துப்படி 'மக்கள் வீட்டில் அமைதியாக இருந்தார்கள்' அவ்வளவுதான். மக்கள் கோஷம் போடவில்லை, கட்சிகள்தான் போட்டன. (சமீபத்தில்கிராமப்புறம் ஒன்றில் சங்கிலியைத் திருட முயன்ற மூவர்கள் புலிகள் என்ற சந்தேகத்தில் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டிருப்பது எதைக் காட்டுகிறது?) தமிழகத்தின் சாதாரணபிரஜைக்கு இது இப்போது அன்னியப் பிரச்சினையாகி விட்டது.

அங்கு ஏற்படும் எந்த மாற்றமும் தற்போதைய சூழ்நிலையில் மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதில்லை. மத்திய எதிர்க்கட்சிகளிலும் புலிகளுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பிய விஸ்வ இந்து பரிஷத் பேச்சாளர்களும் அமைதியாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மத்திய ஆட்சியல் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. புலிகள் பிரச்சினையை பௌத்த–இந்து பிரச்சினையாக இதை மாற்றினால் ஏதும் பலன் பாரதீய ஜனதாக் கட்சியினரிடமிருந்து கிடைக்கக் கூடும். தற்போதைய நிலைகள் புலிகளை அந்த நிலைப்பாட்டை எடுக்கச் செய்யப் போவதுமில்லை. தமிழ் பேசும் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்களை அன்னியப்படுத்தும நிலையாக இது அமையும்.

(7 ☛

படிப்பகம்

www.padippakam.com



# "நியாயமான அபிலாஷைகள் தோற்றுப் போவதில்லை"

ரி. சிறீதரன்



எமது சமுதாயம் இருண்ட வரலாற்றுக் காலகட்டமொன்றில் பிரவேசித்திருக்கிறது. எப்போது ஒரு சமாதானச் சூழ்நிலை உருவாகும் என்ற ஏக்கம் எல்லோர் முகங்களிலும் தேங்கியுள்ளது.

இச்சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்?

பேரழிவின் விளிம்பில் நிற்கும் சமுதாயம் எவ்வாறு உயிர்த்தெழப் போகிறது?

சிதறடிக்கப்பட்ட இந்த தமிழ்ச் சமுதாயம் எப்போது ஒருமித்த குரலில் பேசப்போகிறது?

வேதனைகளின் சுமைகளால் துவண்டு விட்ட எம் சமுதாயம் எப்போது நிமிர்ந்து நிற்கப் போகிறது?

சமுதாயத்தை வேதனைகளிலிருந்து விடுவிப்பதில் தமிழர் அரசியல் இயக்கங்களின் பாத்திரம் என்னவாக இருக்கப் போகிறது?

இதில் முதலாவதும், முக்கியமானதும் இயக்கங்களின் ஒற்றுமையே!

எமது விடுதலைப் போராட்டத்தில் எப்போது குரூரமாக ஜனநாயகம் மறுக்கப்பட்டதோ, அப்போது இப்போராட்டம் தவறானதொரு பாதையில் பயணிக்கத் தொடங்கியது. எப்போது புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சுந்தரம் சிவசண்முகமூர்த்தி அவர்கள் சித்திரா அச்சக வாசலில் சுடப்பட்டாரோ அப்போதே தவறான பாதை ஆரம்பமாகிறது.

எப்போது ரெலோ இயக்கத்தின் தலைவர் ஸ்ரீசபாரத்தினம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டாரோ அப்போதே போராட்டம் தவறான பாதையில் உறுதியுடன் பயணிக்கத் தொடங்கியது.

எப்போது ஒரு கால்நூற்றாண்டு காலம் தமிழர் அரசியல் களத்தில் ஒளிவீசிய தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டாரோ அப்போதே தமிழினம் காட்டிக் கொடுக்கப்பட்டது.

எப்போது தோழர் பத்மநாபாவும் 12 தோழர்களும் பலிகொள்ளப்பட்டார்களோ அப்போதே தென்னாசிய அளவிலும் உலகளவிலும் செயற்படக்கூடிய–புகழ்பெற்ற–அடிமட்ட மக்களை நேசிக்கும்–சமாதானத்தை, இனங்களின் சமத்துவத்தை நேசிக்கும்–தலைவனின் இழப்பு ஏற்பட்டது.

எப்போதெல்லாம் கொடுமைகள் எம்மவர்களாலேயே எமக்கு இழைக்கப்படும்போது, மக்கள் மௌனமாக இருந்தார்களோ அப்போதே தவறுகளுக்கு மக்களும் உடந்தையாக இருந்து விட்டார்கள்.

எப்போது புலிகள் இயக்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகள், போராட்டத்தில் மக்கள் பங்குதாரர்கள் என்பதனை நிராகரித்ததோ அப்போதே பாரதூரமான தவறை இழைத்துவிட்டார்கள். பல்வேறு இயக்கங்களின் செயற்பாடுகள் என்பதே ஜனநாயகத்தை தக்க வைத்திருக்கும்; அதேவேளை போராட்டத்தின் வளர்ச்சிக்கும் உதவியிருக்கும்.

ஆனால், சக விடுதலை இயக்கங்களை உடல்மீதியின்றி அழித்தமை, சகோதர முஸ்லீம் மக்களை வேருடன் சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றிய இனச் சுத்திகரிப்பு, அப்பாவிச் சிங்கள மக்களின் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மூலம் பேரினவாத அரசுயந்திரத்தைப் பலப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் சாதாரண, பல இன மக்களிடையே உருவாகக்கூடிய ஐக்கியம் மாத்திரம் சிதறடிக்கப்படவில்லை; சொந்தச் சமுதாயத்தின் போராட்டமும் பலவீனப்படுத்தப்பட்டது.

அவர்கள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று தம்மை இன்றுவரை அழைத்து வந்திருக்கிறார்கள். இன்று அந்தக் கூற்றும் பரிசீலனைக்குரியதாகிவிட்டது.

அடிமைகள் போல் மக்களை அவர்கள் நடாத்தினார்கள். 'நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம். நீங்கள் மூச்சுக் காட்டாதீர்கள்' என்று மக்களுக்குக் கூறியிருந்தார்கள். அதற்காக மக்களின் இளந்தலைமுறையினரின் உடல், பொருள், ஆவி அத்தனையும் விடுதலையின் பெயரால் பெற்றுகொள்ளப்பட்டது. இன்று தமிழ்ச் சமுதாயம் எங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது?

மக்களின் செயற்பாடுகளை நிராகரித்து, அவர்களை மந்தைக்கூட்டம் போல் நடாத்தினார்கள். ஆனால் மக்கள் நாளடைவில் அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த வாழ்க்கை முறைக்குப் பழகிக் கொண்டார்கள்.

எமது மக்கள் அமைதியாக இராணுவத்தினரின் பின்னால் நடந்து செல்கிறார்கள் என்றால், மக்கள் எவ்வளவு கொடுமைகளை அனுபவித்து விட்டார்கள் என்பதனையும், அவர்கள் தாங்க முடியாத வேதனையினைச் சுமந்து சென்றனர் என்பதனையுமே உணர முடிகிறது.

எமது சமுதாயம், அதன் ஆளுமை, சுயம் என்பவற்றை இழப்பதற்கான நிலவரங்களை உருவாக்கியதற்கு புலிகள் பிரதான காரணகர்த்தாக்களாக இருந்தார்கள் என்பதனை வெகு இலகுவில் மறுத்துவிட முடியாது.

மறுபக்கம் 50 ஆயிரம் தமிழ் மக்கள் மரணித்து, பலகோடிக்கணக்கான பெறுமதியான சொத்துக்கள்அழிந்து, விலைமதிக்க முடியாத கல்வி சீரழிந்து, பாரம்பரிய, நவீன தொழில் துறைகள் பல நிர்மூலம் செய்யப்பட்டதன் பின்னர், அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்ட யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கிறதா? அதுதான் இல்லை.

**அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தில்**

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களின் தொடர்ச்சி பற்றி தெளிவாக எதுவும் கூறப்படவில்லை.

இனப்பிரச்சினை இந்த நாட்டின் பிரதான பிரச்சினை என்பதற்கு போதியளவு அழுத்தம் கொடுக்கப்படவில்லை.

பொலிஸ் அதிகாரம் நிர்வாக அதிகாரம் நீதித்துறை என்பன முழுமை பெறவில்லை.

ஜனாதிபதி மாநில அரசை கலைப்பதற்கான அதிகாரம்.

எல்லை மீள் நிர்ணயம் பற்றிய தெளிவற்ற கருத்துக்கள்.

பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள விசேட அந்தஸ்து.

**முன்னேற்றகரமான அம்சங்கள் எனும் போது–**

ஒற்றையாட்சி அமைப்பு நீக்கப்பட்டுள்ளமை.

முதலமைச்சரின் ஆலோசனையுடன் ஆளுநர் நியமனம்.

நிலம் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள்.

இன்று உலகளாவிய அளவில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கருத்துக்கள் வளர்ந்துள்ள அளவிற்கு எமது நாட்டின் அதிகாரப் பரவலாக்கல் ஒரு மிகச் சிறு முன்னேற்றமேயாகும்.

சமஷ்டி அமெரிக்கா, கனடா, சுவிற்சர்லாந்து கீழைத் தேசங்களில் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள அளவிற்கு இங்கு நிகழ்ந்தது அற்பமானதே.

பௌத்த மத உயர்பீடங்களை அலங்கரிப்போர் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது எனக் கேட்க முனைகிறார்கள்.

இந்தியா, மொரிசியஸ், மலேசியா போன்ற நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். சிங்களவர்களுக்கு இந்த நாடு மாத்திரம்தான் உள்ளது என்கிறார்கள். —

உண்மையான ஐக்கியம் உண்மையான சமத்துவத்தினடிப்படையில் தான் உருவாக முடியும். சுயமரியாதை, கௌரவம் பாதுகாக்கப்படுகிறது என்பது உணரப்படும்போதுதான் இந்த நாடு ஐக்கியமாக இருக்கும்.

இந்தப் பிரச்சினைபற்றி பிரபலமான இடதுசாரித் தலைவர் ஒருவரால் கூறப்பட்ட பிரபலமான வாக்கியமொன்று உண்டு:

"ஒருமொழிக்கொள்கை இந்தநாட்டை இரண்டாக்கும். இருமொழிக்கொள்கை இந்தநாட்டை ஒன்றாக வைத்திருக்கும்"

மொழி தொடர்பான இந்தக் கருத்து ஒரு சிறுபான்மைச் சமூகம் தொடர்பான சகல விடயங்களுக்கும் பொருந்தும்.

இன்று சுற்றிவளைப்பு பயணிகள் வழிமறிப்பு என்று எண்ணிலடங்காத் துன்பங்களை தமிழர்கள் அனுபவிக்கிறார்கள்.

தமிழர், தாம் கைதுசெய்யப்படாமல் இருப்பதானால் பல ஆவணங்களை வைத்திருக்க வேண்டும். சிலவேளை ஆவணங்கள் இருந்தாலும் கைது செய்யப்படலாம். இந்த நாட்டில் தமிழர் அல்லது முஸ்லீமைக் கைது செய்து சிறையிலிடுவது போல சுலபமான விடயம் வேறொன்றுமில்லை.

அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டது. மக்கள் தமது அபிப்பிராயங்களை சுயாதீனமாக வெளியிடுவதற்கும், அல்லது பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக தகவல் சேகரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் தணிக்கை என்ற பெயரில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சிங்கள, ஆங்கில இனவாதப் பத்திரிகைகள் தாராளமாக இனவாத விஷம் கக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

பிரதானமாக தமிழ் மக்களின் நிலவரங்கள் பற்றிய செய்திகளை அறிய ரூபவாஹினியைத் தவிர வேறு மார்க்கமில்லை என்றாகிவிடுகிறது. அது சொல்வதெல்லாம் உண்மையா பொய்யா என்பதனை யாம் அறியோம் பராபரமே.

அதற்கு, ரூபவாஹினி என்ற பெயரைவிட சிங்களவாஹினி என்ற பெயரே மிகவும் பொருந்தும். அந்தளவிற்கு அதில் தமிழ் நிகழ்ச்சிகள் அருமையிலும் அருமை.

இராணுவத்தின் வீரப் பிரதாபங்களும், முதுபெரும் ஆளும்கட்சி அரசியல்வாதிகளின் பிறந்தநாள் வைபவங்களும், கிரிக்கெட் விளையாட்டு பற்றிய பிரலாபங்களும் தான் இடம் பெறுகின்றன.

அது ஒரு அரச ஊதுகுழலாக படிப்படியாக மாறி வருகிறது. நாளாந்தம் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றி அது மூச்சுக் காட்டுவதில்லை, அல்லது மௌன விரதம் அனுஷ்டிக்கிறது.

என்னதான் நிலவரங்கள் இருந்தாலும் தமிழ் மக்கள் தமது நம்பிக்கைகளை தளரவிடக்கூடாது. எதிர்காலத் தலைமுறையின் தலைவிதி இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களிலேயே தங்கியுள்ளது. நாம் உறுதியுடன் செயற்படாவிட்டால், எமது இயக்கங்கள் ஐக்கியமாகச் செயற்படாவிட்டால், எமது தலைவிதி அழிவுப் பாதையாகி விடுவது தவிர்க்க முடியாது.

நாம் இறுக்கமாக எமது கரங்களைப் பிணைத்துக் கொள்வோம். எமது உரிமைகளைக் கோருவோம். சாத்தியமான ஜனநாயக வழிகளிலெல்லாம் போராடுவோம். வாதப் பிரதிவாதங்களுக்கு இடமளிப்போம். நியாயபூர்வமான அபிலாஷைகளுக்கான போராட்டங்கள் ஒரேயடியாக தோற்றுப்போனதற்கான ஆதாரங்கள் உலக சரித்திரத்தில் இல்லை.

சர்வதேச சக்திகளின் பங்காற்றலுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்து முன்னெப்போதையும் விட இன்று வலுவுள்ளதாகக் காணப்படுகிறது.

எனவே ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் மாத்திரமே தமிழினம் அழிவுப் பாதையிலிருந்து மீளமுடியும். அதேபோல் ஐக்கியம், தேசிய மட்டத்திலுள்ள முற்போக்குச் சக்திகளுடனும் வலுப்படுத்தப்பட வேண்டும். பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான தற்போதைய சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டால் பிரச்சினைக்குத் தீர்வு இந்த தசாப்தத்தில் இல்லாமல் போகலாம். ●

"நாம் இறுக்கமாக எமது கரங்களைப் பிணைத்துக் கொள்வோம். எமது உரிமைகளைக் கோருவோம். சாத்தியமான ஜனநாயக வழிகளிலெல்லாம் போராடுவோம். வாதப்பிரதிவாதங்களுக்கு இடமளிப்போம். நியாயபூர்வமான அபிலாஷைகளுக்கான போராட்டங்கள் ஒரேயடியாக தோற்றுப்போனதற்கான ஆதாரங்கள் உலக சரித்திரத்தில் இல்லை."

தேசத்தின் ஒழுக்கமாக மனிதனுக்குப் புகட்டப்படுவது நாட்டுப்பற்று. சமூகத்தின் ஒழுக்கமாக ஆதிக்கவாதிகள் புகட்டிக் கொண்டிருப்பது பெண்களுக்கென்றேயான கற்பு. இரண்டுமே முற்றமுழுக்கக் கற்பிதங்கள்தாம்.

வெல்லற்கரிய வல்லரசாக சோவியத் யூனியனை மாற்றியவர், இன்று அது சிதறுண்டு போகவும் கணிசமான அளவு காரணமாகச் சொல்லப்படுபவர் ஜோசப் ஸ்டாலின். ஒரு சட்டத்தால் ருஷ்ய மொழியை சோவியத் ஒன்றியத்தின் தேசிய மொழியாக்கிய ஸ்டாலின் ருஷ்யர் அல்ல; மாறாக ஜோர்ஜியர். இன்று அவர் உயிரோடிருந்தால், ஷெவர்நாட்சேயைத் தலைவராகக் கொண்ட ஜோர்ஜியாவின் குடிமகனாகியிருப்பார். யெல்த்ஸினின் ருஷ்யாவுக்கு அவர் அன்னியர். நாட்டுப்பற்று என்பது கற்பிதமல்லாமல் வேறென்ன?

தேசத்தின் எல்லை மனிதன் விதைத்த முள்வேலிதான். மண்ணிலே எல்லை கட்டும் இந்த கற்பிதத்தை விட மேலானவை மனித உறவுகள். அதனால்தான் சொன்னான்: 'எல்லாம் என்னுடைய ஊர்தான்; எல்லாரும் என்னுடைய உறவினர்தான்' என்று கணியன் பூங்குன்றன். உங்கள் தேசபக்தி பட்டம் வழங்குமானால் அவன்தான் முதல் தேசத் துரோகி!

– நன்றி: கவிதாசரண்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களின் தேவை என்ன?

1995ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரிவிரச–1 இராணுவத் தாக்குதலும்; அதனைத் தொடர்ந்து 1996 ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்ட ரிவிரச–2 இராணுவத் தாக்குதலின் பின் முதன் முறையாக மே மாதம் 8ம் திகதி முதல் தடவையாக இலங்கை அரசாங்கம் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் சாவகச்சேரி கிளாலி ஆகிய பகுதிகளை பத்திரிகையாளர்களுக்கு காட்டி உள்ளது.

பத்திரிகைச் செய்திகளின்படி 80% யாழ் நகர வீடுகள் முழுமையாகவோ பகுதியாகவோ சேதமடைந்துள்ளன. மக்களுக்கான நிவாரணங்கள் முழுமையாக இல்லை. மக்கள் நீண்ட நேரம் நிவாரணப் பொருட்களுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டி உள்ளது. இந்த நிலையே இன்று இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நிகழ்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முழுமையான பஞ்சம் நிலவுவதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

## தவறிய கணக்கும் தமிழ்ப்புலிச் சறுக்கும்

இது இவ்வாறிருக்க, மேற்கொண்டு இராணுவத் தாக்குதல் தொடருமாயின், சிறிலங்கா இராணுவம் மிகப்பெரும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி இருக்குமென புலிகளின் லண்டன் செயலகம் அறிவித்துள்ளது. இராணுவ ரீதியில் குடாநாட்டை காப்பாற்ற முடியாத புலிகள், இன்று வன்னி பெருநிலப்பரப்பில் தம்மை பலப்படுத்தி வருகின்றனர்.

அதேசமயம், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், தமது இராணுவ நடவடிக்கையை அதிகரித்து வருகின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமல்லாமல், கொழும்பிலும் தாம் 3வது போர்முனையை திறந்துள்ளதாக தமது உத்தியோகபூர்வ பத்திரிகையான "களத்தில்" பத்திரிகையில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் எண்ணெய் குதத்தை அழித்தது, மத்திய வங்கியை தகர்த்தது போன்ற சம்பவங்கள் புலிகளுக்கு உற்சாகத்தை கொடுத்திருந்தது. சிறிலங்கா அரசாங்கம் கொழும்பிலும் தமது இராணுவத்தை குவிக்க வேண்டும், மத்திய வங்கி தகர்ப்புடன் பொருளாதாரமும் விழுந்துவிட்டதாக நம்பினார்கள்.

ஆனால் இவை தகர்த்தபின் கூட, புலிகள் எதிர்பார்த்த வகையில் கொழும்பில் இராணுவ, பொலீஸ் நெருக்கடிகள் அதிகரித்ததே தவிர பொருளாதார ரீதியாக பெரிய பின்னடைவுகள் அரசுக்கு ஏற்படவில்லை. இன்னும் 5.6% பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதென மத்திய வங்கி கூறுகின்றது.

அதுமாத்திரமல்ல, வளர்ச்சியுற்ற நாடுகளின்–முக்கியமாக அமெரிக்காவின் கைப்பிடிக்குள் இருக்கும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இன்னும் சிறீலங்காவுக்கு பாரிய அளவில் கடனளித்து வருகின்றன. சிறீலங்காவின் பொருளாதாரம் ஈடாட்டம் காணும் என புலிகள் கணக்குப் பண்ணியிருந்தால் அது தவறென்றே தோன்றுகின்றது.

## மீண்டும் கெரில்லாக்கள்

புலிகள் கொழும்பில் 3வது போர்முனையை திறந்துள்ளதாக கருதுவார்களாயின் அதுவும் அவர்களின் பிழையான எடுகோளாகவே இருக்கும். 1984ம் ஆண்டுக்கு பிற்பாடு ஈரோஸ் மற்றும் புலிகள் கொழும்பை மையமாகக் கொண்ட பல தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

பொருளாதார அமைப்புகளை சீர்குலைப்பது, அப்பாவி மக்களை கொல்வதன் மூலம் அரசாங்கத்துக்கு நெருக்குவாரத்தை கொடுப்பது என்ற அடிப்படையில் அத்தாக்குதல்கள் நடைபெற்று வந்தன. அவ்வகையிலேயே புலிகள் இன்னும் தமது தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றார்கள்.

இது கெரில்லாப் போராட்டத்தின் அம்சமாகப் பார்க்க முடியுமே தவிர, வடகிழக்கைப் போல் 3வது முனையில் பாரிய யுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக இது அர்த்தப்படாது. அதுமாத்திரமல்லாமல் குடாநாட்டு நிலைமையும் கூட புலிகள் கெரில்லாப் போரை மாத்திரமே செய்யக்கூடிய பிரதேசமாக அது சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் போயுள்ளது.

மொத்தத்தில், தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை இழந்து 1984, 1985 காலகட்டங்களைப் போல் ஓர் கெரில்லா போர் முறைக்கு புலிகள் திரும்பியுள்ளார்கள் என்பதே உண்மை.

## போக்குவரத்துச் சிக்கல்

இவை ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்திற்கு ஏறத்தாழ 2 லட்சம் மக்கள் மீளப் போயுள்ளதாக அரசு கூறுகின்றது. அத்துடன் வடமராட்சி, தென்மராட்சியிலும் இலட்சக்கணக்கில் மக்கள் உள்ளார்கள். இவர்களுக்கு உணவுப் பொருட்களும், அத்தியாவசியப் பொருட்களும் கொடுக்க வேண்டிய தேவை அரசுக்குள்ளது.

இதுவரை கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட உணவுவகைகள் பருத்தித்துறையில் இருந்து இறக்கப்பட்டு, பெருமளவு புலிகளால் விநியோகிக்கப்பட்டது. இப்பொழுது உணவுக் கப்பல்கள் நேரடியாக காங்கேசன் துறை துறைமுகத்துக்குச் செல்கின்றது. ஆனால் கடல்வழியாக விநியோகிக்கப்படும் பொருட்கள் மக்களுக்குப் போதுமானவை அல்ல.

கடல்வழியாகவும், வவுனியா, கிளிநொச்சியூடாகவும் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போவதாயின் ஆனையிறவு ஊடாகவே கொண்டு போகவேண்டும். இதுவரையும் புலிகள் அதனை தடைசெய்து தமது கட்டுப்பாட்டில் உள்ள கிளாலி ஊடாகவே கொண்டுபோய் வந்தார்கள். கிளாலி தற்சமயம் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால் இராணுவம் ஆனையிறவூடாகவே தனியார் லொறிகளை அனுமதிக்கும். கிளிநொச்சியில் இருக்கும் புலிகள் இப்படியான போக்குவரத்தை அனுமதிப்பார்களா? என்பது கேள்விக்குரியதே.

## தரைப்பாதை திறக்குமா?

புலிகளைப் பொறுத்தவரை மக்களை வன்னி பெருநிலப்பரப்புக்கு கொண்டு போகவே விரும்பினார்கள். ஆனால் பெருந்தொகையான மக்கள் அதனை மறுத்துவிட்டனர். இதனால் மக்கள் தம்முடன் உள்ளார்கள் என்ற புலிகளின் பிரச்சாரமே பொய்த்துப் போய் உள்ள நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கான உணவை அவர்கள் தரைவழியாக அனுமதிப்பார்கள் என்றில்லை.

இரண்டாவதாக, பொருட்களிற்கான தட்டுப்பாடு, விலையேற்றம் போன்றவை, மக்களிற்கு அரசின் மேல் விரக்தியையும் வெறுப்பையும் உருவாக்கும்; அப்படியான சூழல் ஒன்று உருவாகுவதையே புலிகள் விரும்புவார்கள். மேற்கண்ட காரணங்களை கவனத்திலெடுத்தால், புலிகள் யாழ்ப்பாணத்துடன் தரைப்பாதை திறப்பதை அனுமதிக்க மாட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

இச்சூழ்நிலையில் தரைப்பாதை ஒன்றை திறக்கும் அவசியம் அரசுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அது கிளிநொச்சி, வவுனியா வழியாகவா அல்லது வவுனியா, மன்னார், முழங்காவில், பூநகரி வழியாகவா என்பதே இப்போதுள்ள கேள்வி,

இப்பாதைகளில் ஒன்று திறக்கப்படுமாயின் புலிகள் பாரதூரமாக பலவீனப்பட்டுவிட்டார்கள் என்றே அது பொருள்படும். புலிகளின் மேல் மக்களுக்கு இருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் தவிடுபொடியாகிவிடும். அது மாத்திரமல்லாமல் புலிகள் தமது பேரம்பேசும் திறனையும் இழந்து விடுவார்கள்.

## தீர்வுப் பொதி தேயும்


மறுபுறம் அரசாங்கமும் சிங்கள இனவாத சக்திகளுடன் இணைந்து கொண்டு இன்றைய தீர்வுத்திட்டத்தையே மேலும் குறைக்கும் என்பதையும் எதிர்பார்க்கலாம். கடந்த 15 வருடப் போராட்டமும் 50,000 இற்கு மேற்பட்ட மக்களின் இழப்புகளும், துன்பங்களும் துயரங்களும் வெறும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

அரசைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. அரசிற்குள்ளிருக்கும் எல்.எஸ்.எஸ்.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் தனியார் மயமாக்கல், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றை எதிர்க்கின்றனர். டி.யூ.என்.எப். அரசின் தீர்வுத்திட்டத்தை எதிர்க்கின்றது. தொண்டமான் வேலைநிறுத்தம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவற்றை உருவாக்கி வருகின்றார். மொத்தத்தில் அரசிற்குள் எந்தவிதமான ஸ்திரத் தன்மையுமில்லை.

அதுமாத்திரமல்லாமல், பொருட்கள் விலையேற்றம், நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல், வேலை நிறுத்தங்கள் என பல பிரச்சினைகள் அரசைப் பீடித்துள்ளன. ஈ.பி.டி.பி., புளொட் போன்ற அமைப்புக்கள் பாராளுமன்றத்தில் தம்மை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையும், தொண்டமானை வளைத்துப் போடமுடியும் என்ற நம்பிக்கையிலுமே அரசு உருளுகின்றது.

இப்பிரச்சினைகள் மோசமடையுமாயின் அரசு அடுத்த பொதுத் தேர்தலுக்குப் போவதைத் தவிர வேறுவழியில்லை. இதனை ஜனாதிபதி அவர்கள் பொதுஜன முன்னணித் தலைவர்கள் கூட்டத்திலும் கூறியுள்ளார்.

**போர்முறையை பத்து வருடங்களுக்கு முந்திய நிலைக்கும் வாழ்க்கை முறையை பல பத்து வருடங்களுக்கு முந்திய நிலைக்கும் கொண்டு சென்று விட்டார்கள் 'மாவீரர்கள்'!**




## ஆமிக்கு வெற்றி சரி... அரசியற் கோரிக்கை?

இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியற் கோரிக்கைக்கு என்ன நடைபெறப் போகின்றது என்பதே இன்றுள்ள பெரிய கேள்வியாகும். புலிகளுக்கும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள், தமிழ் கட்சிகளுக்குள் ஒற்றுமையின்மை போன்றவை அரசுக்கு அநுகூலமாகவே இருந்து வருகின்றது.

புலிகள் தவிர மற்றக் கட்சிகள் தமக்கு ஆதரவாக இருப்பதாகவே அரசு உலகம் பூராவும் பிரச்சாரம் செய்கின்றது. இந்நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்க் கட்சிகள் அனைததும இணைநது ஓர் மாற்றுத் தீர்வை உருவாக்க வேண்டும். அதற்கான சர்வதேச ஆதரவினை திரட்ட வேண்டும். முக்கியமாக மாற்றுத் தீர்விற்கான ஆதரவை இந்தியாவிடம் இருந்து பெற்றுக் கொள்ள முனைய வேண்டும். இதனூடாக மாத்திரமே சிறீலங்கா அரசுக்கு நெருக்குவாரத்தைக் கொடுக்கலாம்.

இயக்கங்களுக்குள் ஆயிரம் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அவற்றை ஒதுக்கிவிட்டு, பரந்துபட்ட தமிழ் மக்களின் நலனில் இருந்து சிந்திப்போமாயின், ஓர் மாற்றுத் தீர்வின் அவசியத்தை உணரலாம்.

எனவே இக் கடைசிச் சந்தர்ப்பத்திலாவது புலிகளோ, அவர்களது ஆதரவாளர்களோ இவற்றை உணர வேண்டும். இல்லையேல் இதுவரை போராளிகளும், மக்களும் செய்த தியாகங்கள் அனைத்தும் வீணாகிவிடும்.

எனவே இன்றுள்ள தமிழ் கூட்டமைப்பு இன்னும் விரிவாகி புலிகளும், தமிழர் கூட்டணியும் இணைந்த இறுக்கமான தமிழ் தரப்பாக அது மாறவேண்டும். இதன் மூலமே தமிழ் மக்களுக்கு விடிவினை ஏற்படுத்த முயற்சிக்கலாம். ●

## ஆப்பு இழுத்த புலி.... (5ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய நடவடிக்கைகள் புலிகள் பற்றிய பல்வேறு பிரமைகளை உடைத்தெறிந்திருக்கின்றன. இதுவரை காலமும் இராணுவத்தை உள்ளே வரவிடாமல் வைத்திருக்கிறார்கள். புலிகள் இல்லாவிட்டால் இராணுவம் தமிழ்மக்களை படுகொலை செய்து சூறையாடும் என்ற பிரமைதான் தமிழ்மக்கள் மத்தியில் புலிகள் பற்றி இருந்தன. அதைவிட புலிகள் இப்போது கெரில்லா அமைப்பு அல்ல, மரபுசார் இராணுவம் என்ற பிரமை புலிகளாலும் அவர்களின் ஆதரவுப் பத்திரிகைகளாலும் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இப்போது இந்த பிரமைகள் உடைந்துவிட்டன.......

.....இதுவரை காலமும் அரசாங்கம் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை எடுக்கும் போதெல்லாம் மக்களுக்கு முன்பாகவே ஓடிய புலிகள் தற்போது ஓடும்போது மக்களையும் கூட்டிக்கொண்டு ஓடியதற்கான காரணங்கள் என்ன? முதலாவது, மக்களைவிட்டு இம்முறை ஓடிக்கொண்டால் இன்னொரு முறை மக்களிடம் வந்து தங்களை மக்களின் மீட்பாளர்களாகக் காட்டமுடியாது. அடுத்தது, மக்கள் இல்லாத நிலையில், காட்டுக்கு ஓடினால் கெரில்லா யுத்தமுறை தான் சாத்தியம், மாறாக மக்களுடன் ஓடினால், அவர்களின் அகதிநிலையைவைத்து தங்கள் அரசாங்கத்தை அங்கும் தொடர்ந்தும் வைப்பதன் மூலம் மக்களை தங்களில் தங்கியிருக்கச்செய்து கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கலாம். அத்துடன் மக்களுக்கு அவலநிலையை ஏற்பட வழிவகுப்பதன் மூலம் அரசு தான் அந்த அவலத்திற்கு காரணம் என்ற பிரமையை மக்களுக்கு தொடர்ந்தும் ஏற்படுத்தலாம். அத்தோடு மக்களே எங்கள் மலைகள், காடுகள் என்று அவர்களை ஒரு கவசமாக பயன்படுத்தலாம்.

அடுத்தது, யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க நினைத்த மக்கள் இராணுவம் வந்ததும் தங்கள் அன்றாட வாழ்வை பிரச்சினையின்றிதொடர சிங்களஅரசு வழிவகுத்தால் மக்களின் வாழ்க்கைமுறையை படம் பிடித்து வெளிநாடுகளுக்கு அரசு காட்டும். அது புலிகளின் பிரசாரமுயற்சிக்கு தோல்வியாக முடிந்துவிடும். யாழ்ப்பாணத்திற்கு மின்,எரிபொருள்,உணவு,மருந்து விநியோகமும் தங்குதடையின்றி கிடைத்து வெளிநாட்டுப் பணவரவும் சுலபமாகக் கிடைத்தால் காலப்போக்கில் மக்கள் புலிகளிடமிருந்து அந்நியப்பட்டுவிடக்கூடும். அதிலும் புலிகளின் வழமையான அராஜகங்கள், கப்பங்கள், வரிகள், அடக்குமுறைகள் இல்லாமல், பாடசாலைகள் புலிகளின் ஆட்சேர்ப்பு பயம் இன்றி நடக்க,வாழும்முறையை மக்கள் சுலபமாக ஏற்றுக்கொள்ளநினைப்பதில் தவறும் இல்லை. அதைவிட யாழ்ப்பாண மக்களின் மனோபாவமும் புலிகளுக்குப் புரியாததல்ல. நல்லூர் திருவிழாவையும் ஒழுங்காக நடத்த விட்டு, சாமத்தியச் சடங்கு, திருமணச் சடங்கு போன்ற அத்தியாவசியமானவற்றை தங்குதடையின்றி நடத்த விட்டால் யாழ்ப்பாண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் யாவும் 'சூரியக் கதிரைக் கண்ட பனிபோல' மறைந்துவிடும். 12

படிப்பகம்

www.padippakam.com



# கூட்டணியில் கூட்டணி வேண்டும்

சாரதி
ஜெர்மனி

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென திருமதி சந்திரிகா குமாரதுங்கா அரசு முன்வைத்த அரசியல் ஆலோசனைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றைத் திருத்தி ஒரு முழுமையான அரசியல் தீர்வை எட்டுவதற்கு, அதன் மூலம் மக்கள் ஒரு சுதந்திரமான வாழ்வை அடைவதற்கு ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வருகின்றன.

ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும்; இலங்கைஇந்திய ஒப்பந்தம்மூலம் கடந்த ஒன்பது வருடங்களாக தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும்; முழுமையான அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும் என்ற விடயங்களை வலியுறுத்த வேண்டி ஒரு பொதுக்கருத்தை எட்டியுள்ள இத்தமிழ்க் கட்சிகள், தமக்குள் ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டு சிங்கள அரசியல் கட்சிகள், வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ஐரோப்பிய பாராளுமன்றக்குழு என விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றனர்.

## பேரினவாதிகளால் திருத்தப்படும் தமிழ்ப் பிரச்சினைத் தீர்வு!

சந்திரிகா அரசினால் 1995 ஆகஸ்ட்டில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் செழுமைப்படுத்த வேண்டியதாகவே இருந்தது. இவ்வாலோசனைகள் முன்வைக்கப்பட்ட காலத்திலிருந்து சட்டவரைவாக கொண்டு வரப்படும் காலம் வரை பௌத்த சிங்கள பேரினவாதிகளால் இவ்வாலோசனைகள் குறித்த எதிர்ப்பலைகள் கிளம்பின. இதனைக் கண்டு பயந்த அரசு, குறைபாடுகளைக் கொண்ட ஆலோசனைகளை இன்னும் மோசமானதான திருத்தங்களுடனான சட்டவரைவாக கொண்டு வந்தது.

அரசியல் தீர்வு மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை வைத்துள்ள இத் தமிழ்க்கட்சிகள் அரசின் ஆலோசனைகளை வரவேற்றதுடன், அதிலுள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி செழுமைப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தின.

ஆனால்- இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசியல் ஆலோசனைகளை முன்வைத்ததாய் கூறிக்கொண்ட அரசு, தமிழ் கட்சிகள் கூறியவற்றை கணக்கிலெடுக்காது, பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பலைகளை மட்டும் கணக்கிலெடுத்து குறைபாடு கொண்ட ஒரு அரசியல் சட்டவரைவை முன்வைத்துள்ளது.

இச் சட்டவரைவு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை என்பதனை தமிழ்க் கட்சிகள் உணர்ந்து கொண்டன. அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்டு ஆகஸ்ட்ஆலோசனைகளை தமிழ்க் கட்சிகள் வரவேற்றபோது இக்கட்சிகளை அரசின் அடிவருடிகள் என எள்ளி நகையாடியவர்களும் உண்டு. ஆலோசனைகளை வரவேற்பது யதார்த்தபூர்வமான தமது தார்மீகக்கடமை என தமிழ்க் கட்சிகள் பொறுப்புடன் நடந்து கொண்டன.

ஆனால் அரசு பல்டியடித்தபோது தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் குறித்த தூர நோக்கின் அடிப்படையில், தாம் ஒன்றுபட்டு கூட்டணி அமைத்து, அரசியல் சட்டவரைவில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி தமது பக்கமுள்ள நியாயங்களை சர்வதேச அரங்கில் எடுத்துரைக்கும் வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்டு வருகின்றன.

## ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுக்கு தமிழ்க்கட்சிகள் பொறுப்புணர்வு

"நாம் என்ன செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தலைவர்கள் கருதுகிறார்கள்? தமிழ்த் தலைவர்கள் மத்தியில் பெரும் நேர்மையீனம் இருப்பதாக நான்கருதுகின்றேன்" என ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் 'இந்து' பத்திரிகை நிருபர் மாலினி பார்த்தசாரதிக்கு அளித்த பேட்டியில் விசனமாகத் தெரிவித்ததிலிருந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் செற்பாடுகள் எந்த அளவுக்கு அரசியல் அரங்கில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன என்பது தெளிவாகிறது.

தாம் சொல்வதற்கெல்லாம் தமிழ்த் தலைமைகள் தலையாட்டுவார்கள் என்ற ஜனாதிபதியின் கணிப்பு தவறானது. மக்களின் நலன்களின் அடிப்படையிலேயே தமிழ்த் தலைவர்கள் செயற்படுவார்கள் என்பதனை கூட்டணி அமைத்த தமிழ்க் கட்சிகளின் நடவடிக்கைகள் மூலம் ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றுபட்ட தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகளை வெறுமனே தமிழ் பேசும் மக்களின் நலன்களில் மட்டுமே அக்கறை உள்ளவை என அர்த்தப்படுத்திவிட முடியாது. ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினையைத் தீர்க்க, நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்த, பொருளாதாரத்தை மேம்படுத்தவே தமிழ் கட்சிகள் தமது ஒற்றுமையான செயற்பாடுகள்மூலம் முயன்று வருகின்றன. இதற்காக மக்கள் நலன்கருதி பல விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு ஏனையோருக்கு முன்மாதிரியாக திகழ்கின்றன. இந்த அடிப்படையிலேயே ஆகஸ்ட்ஆலோசனைக்கு ஆதரவும் வழங்கின.

ஆனால் புதிய சட்டவரைவு மூலம் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகும்போது, இதுவரைக்குமான இழப்புகள் தியாகங்களுக்கான பலனெதுவுமற்றதாகப் போகும்போது, அதனை அப்படியே முட்டி முழுங்கிக் கொண்டு அரசின் சட்டவரைவுகளுடன் கட்டியழ வேண்டும் என அரசோ, வேறு யாருமோ எதிர்பார்க்க முடியாது.

## த.வி.கூட்டணியின் மீண்டுமொரு வரலாற்றுத் தவறுப் புள்ளி

இந்தக் கூட்டணி என்பது யதார்த்தத்தின் வெளிப்பாடு; காலத்தின் கட்டாயம். ஆனால் இது ஒரு முழுமையான கூட்டணியாக இல்லை. தமிழ் பேசும் மக்களின் நலன்களின் அடிப்படையில் சட்டவரைபின் குறைபாடுகளை செழுமைப்படுத்தி பூரணப்படுத்தும், தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த குரலாக இந்தக் கூட்டணி இல்லை. தமிழ் பேசும் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் தேவைப்படும் ஒரு சிறந்த அரசியல் தலைமையை ஏற்படுத்தவல்ல பூரணமான கூட்டணியாக இல்லை. இதற்கு காரணம் என்ன?

தமிழ் பேசும் மக்களின் தலைமைகளாக வலம்வரும் ஆறு கட்சிகளில் ஐந்து கட்சிகள் கூட்டணி அமைத்து செயற்படும்போது ஆறாவது கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துச் செயற்படுவது தமிழ் பேசும் மக்களின் துர்ப்பாக்கியமே. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அரசியல்ரீதியாக வென்றிட கூட்டணியில் கூட்டணியும் வேண்டும்.

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு, அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதெல்லாம் இரண்டாம் வகுப்புப் பிள்ளைக்கும் தெரிந்த ஒற்றுமை பற்றிய சமாச்சாரங்கள். இவை கூட்டணியினருக்கு மட்டும் தெரியாமலிருக்க நியாயமில்லை. இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ்மக்களின் நலன்களின் அடிப்படையில் கூட்டணியினர் தமிழ்க் கட்சிகளின் புதிய கூட்டணியில் சேர்ந்துசெயற்பட வேண்டும். இல்லையேல் கூட்டணியினர் மீண்டுமொரு வரலாற்றுத் தவறுப் புள்ளியை தங்களுடன் சேர்க்க வேண்டி இருக்கும்.

நாட்டின் நன்மை கருதி, தமிழ் பேசும் மக்களின் உரிமை வேண்டி அரசியல் தலைமைகள் ஒன்று சேர இந்த இருபதாம் நூற்றாண்டில் பலமுறை பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டன. அதிலும் தமிழ் தலைமைகளின் ஒற்றுமை வேண்டி பலமுயற்சிகள் இடம்பெற்றன. இவற்றில் பெரும்பான்மையானவை தோல்வியைத்தழுவியதோடு, பல பக்க விளைவுகளையும் ஏற்படுத்தி இன்றைய சூன்ய நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளன.

மனித வளர்ச்சியானது தனது தோற்ற காலத்திலிருந்து பல வியத்தகு முன்னேற்றங்களைக் கொண்டு பரிணாமம் பெற்று வருகின்றது. விட்டுக்கொடுப்புகளும், ஒற்றுமை உடன்பாடுகளும் நாகரீகத்தின் உச்சிக்கே மனிதனை இட்டுச் செல்லுகிறது என விஞ்ஞான உலகம் பெருமைப்படுகிறது. ஆனால் நாம் மட்டும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தது போலவே இன்றும் செயற்படுவ்து வெட்கத்துக்குரியதாகும்.

யார் யாருடன் சேர்கிறார்கள் என்பதனை விட சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள்? செய்கிறார்கள்? செய்யப்போகிறார்கள்? என்பதே முக்கியமானதாகும்.


எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா


எஸ்.ஜே.வி.செல்வநாயகம்

**1948இல் மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோது செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்றோர் இதனை எதிர்த்தனர். ஆனால் யு.என்.பி. அரசில் அமைச்சர்களாக இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம், வே.குமாரசாமி போன்றோர் வாக்களிப்பில் மௌனம் சாதித்ததன் மூலம் தமது ஆதரவை வழங்கினர்.**

**ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்ற கோஷத்தை முன்வைத்து 1956 தேர்தலை பண்டாரநாயக்கா எதிர்கொண்டார். இத்தேர்தலில் தமிழ்த் தலைவர்கள் பொதுப் பட்டியலின் கீழ் போட்டியிட்டு, ஒன்றுபட்டுநின்று சிங்கள இனவாதத்தை எதிர்க்க வேண்டும் என கொழும்பில் மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை இடம்பெற்றன. ஆனால், தமிழ்த் தலைவர்களால் ஒற்றுமைப்பட முடியவில்லை.**

## 1930 இல் சறுக்கிய அந்நேரத் தலைமைகளின் ஒற்றுமை

1930 இல் ஆங்கிலேய அரசினால் அமைக்கப்பட்ட டொனமூர் ஆணைக்குழு, அரசியல் சீர்திருத்தம் ஒன்றை முன்வைத்தது. இந்த அரசியல் சீர்திருத்தமானது பூரண சுய ராஜ்யம் ஒன்றைத் தரத் தவறிவிட்டது. இந்த அரசியல் சீர்திருத்தப் பரிந்துரைகள் தமிழர்களின் அழிவுச் சாசனமே எனக்கருதி அன்றைய தமிழர் தலைமையாக இருந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இந்தப் பரிந்துரைகளை நிராகரித்தது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் நாடெங்கிலும் நடைபெற்ற சட்டசபை தேர்தலை இளைஞர் காங்கிரஸ் நிராகரித்தது. தமிழ் மக்கள் தமது எதிர்ப்பினை ஆங்கிலேய அரசுக்கு ஒற்றுமையுடன் ஏகமனதாகக் காட்ட வேண்டும் எனக் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தது. ஆனால் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு மன்னாரில் ஆனந்தம் என்பவர் போட்டியிட்டார். யாழ்ப்பாணத்தில் காங்கிரசாரின் பகிஸ்கரிப்பை கண்ட ஜீ.ஜீ. பொன்னம்பலமும் மன்னாரில் சென்று போட்டியிட்டார். கிழக்கில் மாக்கான் மரிக்காரும் போட்டியிட்டார்.

தமிழ் மக்களுக்கு உரிய இடம் வேண்டும் என்ற இளைஞர் காங்கிரசின் கோரிக்கையை பிலிப் குணவர்த்தனா போன்ற இடதுசாரிகள் ஆதரித்தனர். சேர். பொன் இராமநாதன் இப் பரிந்துரைகளை எதிர்த்து இலண்டன் சென்று வாதாடினார். ஆனால் இளைஞர் காங்கிரசுடன் ஒற்றுமைப்பட்டு தேர்தலை ஏகமனதாக நிராகரிக்க தேர்தலில் போட்டியிட்டவர்கள் மறுத்துவிட்டனர். ஆனால் 1934 இல் ஆங்கிலேய அரசு தமிழர்களின் உறுப்புரிமை சட்டசபையில் அவசியம் என்பதனை உணர்ந்து இடைத்தேர்தலை நடாத்த முன்வந்தது. 1930இலேயே ஒட்டுமொத்தமான எதிர்ப்பைக் காட்டியிருப்பின் ஆங்கிலேய அரசு தமிழ்த் தலைவர்களுடன் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்.

## சிங்களம் மட்டும் சட்டத்தை தோற்கடிக்க முடியவில்லை

1944இல் சோல்பரி ஆணைக்குழு முன்பு ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ், தமிழர்களுக்கு அரைவாசிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து வாதாடியது. ஐம்பதுக்கு ஐம்பது என்று எல்லோராலும் இக்கோரிக்கை வர்ணிக்கப்பட்ட காலம். ஆனால் பேராசிரியர் சுந்தரலிங்கம், க.நடேச பிள்ளை, அருணாசலம் மகாதேவா போன்றோர் இதற்கு ஒத்துழைக்கவில்லை. இக்கோரிக்கைக்கு தமிழ் தலைவர்களின் முழுமையான ஒத்துழைப்புக் கிடைத்திருப்பின் தமிழர்களின் உரிமைகள்பற்றியும் ஆங்கிலேய அரசு சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கக் கூடும்.

1947 ஆகஸ்ட் 23 முதல் பத்தொன்பது தினங்கள் நடைபெற்ற இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் தமிழ் சங்கமும், தமிழ் காங்கிரசும் போட்டியிட்டன. தெற்கில் யூ.என்.பி.யும் மற்றும் எல்.எஸ்.எஸ்.பி., பி.எல்.பி., கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தொழிற்கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளும் 181 சுயாதீன உறுப்பினர்களும் போட்டியிட்டனர்.

யூ.என்.பி. 42 இடங்களையும் ஏனைய தமிழ் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள், சுயேட்சை உறுப்பினர்கள் 53 இடங்களையும் பெற்றனர். யூ.என்.பி.யை ஆட்சி அமைக்க விடாது ஏனையோர் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைப்பதற்காக அரச வழக்கறிஞராக இருந்த எச். சிறீ. நிசங்கா தனது இல்லத்தில் இவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தினார். ஆனால் கொள்கை முரண்பாடு காரணமாக அவர்களால் ஒரு அரசை அமைக்க முடியாது போய் யூ.என்.பி.யிடம் ஆட்சிப் பொறுப்பை தாரைவார்த்தனர்.

அன்று அவர்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்திருப்பின், 1948இல் மலையக மக்களின் வாக்குரிமையை யூ.என்.பி. பறிக்கமுடியாது போயிருக்கும். பின்னால் யூ.என்.பி. தன்னை வளர்த்துக்கொள்ள முடியாத நிலையும் தோன்றியிருக்க வாய்ப்பேற்பட்டிருக்கும். 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, தமிழ் காங்கிரஸ் மட்டுமே வாக்களித்து தோற்றுப் போக நேர்ந்திருக்காது.

## பிரஜாவுரிமை பறிப்பும் ஆட்சிமொழி சிங்களமாதலும்

1948இல் மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டபோது செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்றோர் இதனை எதிர்த்தனர். ஆனால் யூ.என்.பி. அரசில் அமைச்சர்களாக இருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம், வே. குமாரசாமி போன்றோர் வாக்களிப்பில் மௌனம் சாதித்ததன் மூலம் தமது ஆதரவை வழங்கினர்.

இந்தச் சட்ட மூலத்தை எதிர்த்து மலையகத் தலைவர்கள் பாராளுமன்ற வளவுக்குள் சத்தியாக்கிரகம் மேற்கொண்டனர். இதில் வடக்கு கிழக்கிலிருந்து எந்தத் தமிழ் தலைவர்களும் கலந்து கொள்ளவில்லை. இதன் மூலம் தமிழர்களின் ஒற்றுமையின்மையை தோலுரித்துக் காட்டியதோடு மலையக மக்களுக்கென ஒரு தனித்தலமை உருவாக வழி வகுத்தனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் இருபத்திநாலு மணிநேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்ற கோஷத்தை முன்வைத்து 1956 தேர்தலை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா எதிர்கொண்டார். இத்தேர்தலில் தமிழ் தலைவர்கள் பொதுப்பட்டியலின் கீழ் போட்டியிட்டு ஒற்றுமைப்பட்டு சிங்கள இனவாதத்தை எதிர்க்க வேண்டும் என கொழும்பில் மூன்று தடவைகள் பேச்சுவார்த்தைகள்

படிப்பகம்

www.padippakam.com



இடம்பெற்றன. முதலாவது சந்திப்பு ஏ.எல். தம்பையா வீட்டிலும், இரண்டாவது சந்திப்பு கோல்ஃபேஸ் ஹோட்டலிலும், மூன்றாவது சந்திப்பு செ.நாகலிங்கம் வீட்டிலும் நடைபெற்றது. ஆனால் தமிழ்த் தலைவர்களால் ஒற்றுமைப்பட முடியவில்லை.

## வரலாற்றில் நிகழ்ந்த தமிழ்த் தலைமைகளின் ஒற்றுமைகள்

இப்படியான அனர்த்தங்களை விட, காலத்தின் தேவை கருதி தமிழ் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டும் உள்ளனர். தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய கூட்டணி (TUF) உருவாகி, 1972இல் ஒரு ஆறம்சக் கோரிக்கையை முன்வைத்தது. இக்கூட்டணியே பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) ஆகியது. இக் கூட்டணி அன்றைய பெருவெற்றியாக தமிழ்பேசும் மக்களால் கருதப்பட்டது.

ஆயுதப் போராட்ட காலத்தில் ஈ.பி.ஆர். எல்.எப்., ரெலோ, ஈரோஸ் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து ஈ.என்.எல்.எப். என்னும் ஒரு கூட்டணியை உருவாக்கினர். இதில்பின்பு எல்.ரி.ரி.ஈ.யும் இணைந்து கொண்டது. திம்புப் பேச்சுவார்த்தையில் இக் கூட்டமைப்பு பெரும் பங்காற்றியது. அன்றைய காலகட்டத்தில் ஈ.என்.எல்.எப். என்னும் கூட்டணியை பெருவெற்றியாக மக்கள் கருதினர். ஆனால் இந்தக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே ஏனைய அமைப்புக்களை எல்.ரி.ரி.ஈ. துவம்சம் செய்ததன் மூலம், இக் கூட்டமைப்பை நிர்மூலமாக்கியதோடு போராட்டத்தையும் அஸ்தமனப்படுத்தியது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண அரசு (1989) அமைக்கப்படுவதற்கு ஒத்துழைக்க தமிழ்க் கட்சிகள் பின்வாங்கின. ஈ.பி.ஆர். எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., முஸ்லீம் காங்கிரஸ் ஆகியவையே தேர்தலில் போட்டியிட்டன.

அன்று மாகாண அரசு அமைப்பதற்கு அனைத்து தமிழ் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கியிருப்பின், இன்றைய அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்றி பல அரசியல் முன்னேற்றங்களையும் வென்றிருக்க முடியும். இக் காலகட்டத்தில் (1989) ஈ.பி.ஆர். எல்.எப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எப். என்பன ஒன்றிணைந்து தமிழ் தேசிய சபை என்னும் இக் கூட்டமைப்பை நிறுவினர்.

## ஒரு நாட்டில் ஓர் அரசுதானா இருக்க முடியும்?

1991இல் தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு வந்தாலே அவர்களுடன் பேசமுடியும் என்று பிரேமதாசா அரசு பூச்சாண்டி காட்டியபோது ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், முஸ்லீம் காங்கிரஸ் ஆகிய ஏழு கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்து பிரேமதாசா முகத்தில் கரிபூசின. அத்துடன் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்குத் தீர்வாக நாலம்சக் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தனர். 1995 ஆகஸ்ட்டில் சந்திரிகா அரசு அரசியல் ஆலோசனைகளை முன்வைக்கும் வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்வைக்கப்பட்டிருந்த ஒரேயொரு ஆலோசனையாக இந்த நாலம்சக் கோரிக்கையே விளங்கியது.

அண்மையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பில் ஒன்றான ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பேசுகையில், பிராந்திய சபை என்பது பிராந்திய அரசு என மாற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார். ஆனால் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாண அரசு என, அதன் முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள் அவர்கள் பாவித்த பதம் தொடர்பாக 10.04.89 இல் பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சையே இடம்பெற்றது. நாட்டில் ஒரு அரசுதான் இருக்கமுடியும் என யூ.என்.பி.யினர் தெரிவித்த போது, அன்று சபையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோகசங்கரி, ஒரு நாட்டில் பல அரசுகள் இருக்க முடியும் என்று பலநாடுகளை உதாரணம் காட்டி விளக்கி வைத்தார்.

## கொள்கையில் வேறுபடாத கூட்டணியின் தயக்கமென்ன?

இந்தப் பிரச்சினை இன்றுநேற்று தொடங்கியதல்ல. 1956இல் தமிழரசுக் கட்சியினர் சமஷ்டி அமைப்புபற்றிய ஒரு வரைபை அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவிடம் கையளித்தனர். அதனை பார்வையிட்ட பிரதமர் அவ்வரைபில் சமஷ்டி அரசு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டிருந்த பாராளுமன்றம், மந்திரி சபை என்ற பதங்களை அகற்றுமாறு கூறினார். தமிழரசுக்கட்சியினர் பாராளுமன்றத்தைப் பிரதேசசபை என்றும், மந்திரிசபையை இயக்குனர் சபை என்றும் மாற்றியமைத்து பிரதமரிடம் மீண்டும் கையளித்தனர். அதனைப் பார்வையிட்ட பிரதமர், அதில் குறிப்பிடப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் உள்ளடக்கிய பிரதேசசபை என்பதனை கடுமையாக ஆட்சேபித்தார். தமிழரசுக்கட்சியினர் அத் தாயகக் கோட்பாட்டை விட்டுக்கொடுக்காததால் அப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

டொனமூர் ஆணைக்குழு, சோல்பரி ஆணைக்குழு என்பனவே தமிழரின் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்திருந்தன. ஆனால் அன்று தமிழ் தலைவர்களின் ஒற்றுமையின்மை காரணமாக இன்று இப்பிரச்சினை பூதாகாரமாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனை மனதில் கொண்டு தமிழ் கட்சிகள் அமைத்துள்ள புதிய கூட்டணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றிணைந்து தனது வரலாற்றுப் பங்களிப்பை நல்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணியும், யூ.என்.பி.யும் எதிர்க்கின்றன. இதுபற்றி தமிழ் கட்சிகள் கொண்டுள்ள அதே கருத்தையே தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் வீரகேசரிக்குத் தெரிவித்துள்ளார். இதே கருத்தையே தமிழர் விடுதலைக்கூட்டணியினர் அண்மையில் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் தெரியப்படுத்தியுள்ளனர்.

சட்டவரைவில் உள்ள குறைபாடுகள் பற்றிய விடயத்தில் ஏனைய தமிழ் கட்சிகளும் நாமும் ஒரே கருத்தையே கொண்டிருக்கிறோம் என அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரி பி.பி.சி.க்குபேட்டியளித்தபோது, ஆனந்திமிடம் நாசூக்காகத் தெரிவித்துள்ளார். முழுமையற்ற ஒரு தீர்வை தமிழ் மக்களை ஏற்கும்படி வற்புறுத்த முடியாது என வீரகேசரிப் பேட்டியில் அண்மையில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ஆக, தமிழ் கட்சிகள் கூட்டணி கூறிவரும் அதே கருத்துக்களையே த.வி.கூட்டணியினரும் கூறிவருகின்றனர். இருபகுதியினரும் வேறுவேறாக இவற்றைச் சொல்வதன் மூலம் கிடைக்கும் பலனைவிட ஒன்றிணைந்து சொல்வதன் மூலம் இக்கூற்றுக்கள் வலுவுள்ளதாக இருக்கும் என்பதனை த.வி.கூட்டணியினர் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## உரிமைகளை வெல்வதானால் ஒன்றுபடுதல் வேண்டும்

நாம் பாராளுமன்றம் சென்றால் எமது சட்டநுணுக்க வல்லுனத் திறமைமூலம் தமிழ் மக்களின் பிரச்சினையை எளிதில் தீர்ப்போம் என்று 1994 ஆகஸ்ட் தேர்தலில் போட்டியிட்டபோது மக்களிடம் கூறியே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வாக்குக் கேட்டனர். மக்களும் அவர்களை பாராளுமன்றம் அனுப்பினர். அத்துடன் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் மூத்த தலைமுறைத் தலைவர்கள் என்றும் மதிக்கப்படுபவர்கள். இவர்கள் கூறும் திறமையோடு ஒற்றுமையும் சேர்த்துச் செயல்பட்டால் தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் விரைவில் கிட்டும்.

நாம் அகிம்சைவாதிகள் அவர்கள் ஆயுதக் குழுக்கள் என்று காரணங்கள் கூறி வெண்ணை திரண்டு வரும்போது தாளி உடைய த.வி.கூட்டணியினர் காரணமாக இருக்கக் கூடாது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் விட்ட அதே பிழையை த.வி.கூட்டணியினர் இன்று ஆகஸ்ட் யோசனை சட்டவரைபிலும் விட்டு, தமிழ் பேசும் மக்களை இன்னும் படுகுழியில் தள்ளக் கூடாது.

ஏற்கனவே தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ள தமிழ் கட்சிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு கூட்டை ஏற்படுத்தியிருந்தனர். 1989 பெப்ரவரி 15இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தின் கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ரெலோ ஆகிய கட்சிகள் ஒன்றுபட்டு போட்டியிட்டு 188394 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றனர்.

மற்றவர்களின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி மீண்டும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை கோட்டைவிட இதுவல்ல தருணம். குறைபாடு கொண்ட, தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் அளிக்காத சட்டவரைவையே எதிர்க்க பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஒன்றுபட்டு நிற்கின்றனர். சட்டவரைவில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தமிழ் பேசும் மக்களுக்கு நிம்மதியான, சுதந்திரமான வாழ்க்கையை ஒற்றுமைப்பட்டு தேடித் தரவேண்டியது தமிழ்த் தலைமைகளின் தலையாய கடமையாகும்.

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு சரியான திசைவழி கொண்ட திறமைவாய்ந்த அரசியல் தலைமையை வழங்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பும் இன்றைய காலகட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே தமிழ் கட்சிகள் அமைத்துள்ள புதிய கூட்டணியில் தமிழர் விடுதலைக்கூட்டணி இணைந்து செயற்பட வேண்டும்.

இதன்மூலமே தமிழ்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கவும், யுத்தமற்ற வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவும், தமிழ்த் தலைமைகள் தங்கள் முயற்சியைச் சரிவரச் செய்தன என்று சொல்லிக்கொள்ள முடியும்.

## குறுக்கெழுத்துப் போட்டி-23



### இடமிருந்து வலம்

1. தோல்விகண்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்.
5. மூக்கு.
7. காலனுக்குக் கடையெழுத்தில்லை.
8. ராணுவ வீரர்கள் தங்கியிருக்கும் முகாம்.
9. இதுபோன்ற எதிர்ப்பு முறைகள் பலனற்றுப் போனபின்தான் ஆயுதம் தூக்க நேர்ந்தது.
11. கண்ணனின் எதிரி.
13. அமிலம்.
16. கள்.
17. கவனத்துடன் கூடிய அக்கறை. (குழம்பி)
18. வெற்றி பெற்றவர்களுக்கு அணிவிக்கப்படுவது.
19. நடந்ததை அறிய எஞ்சிய அடையாளம்.
21. கல்லெல்லாம் சிலையான அந்த இடத்தின் பெயருக்குக் காரணமான பல்லவ மன்னன்.
23. இதுகூட நாடாளும் என பரதன் காலத்திலேயே தெரிந்துவிட்டது.
25. மென்மை.
26. அரவம். (குழம்பி)
28. அரசினால் வசூலிக்கப்படுவது.
29. நாற்காலி.
30. கடை இன்றேல் படு; நடு இன்றேல் பகை; கடையது கையாகும். நதியோரம் உண்டாகும்.
31. பூவின் அடியிலும் பசுவின் மடியிலும் உள்ளது. கடைசியெழுத்தில்லை. (தலைகீழ்)

### மேலிருந்து கீழ்

1. விண்மீன்.
2. கொடுமையான துன்புறுத்தல்.
3. சுயநினைவற்ற நிலை.
4. குழம்பிய சிற்றூர்.
5. பேரழிவு.
6. கைதிகளை அடைக்கும் இடம்.
8. தேருக்குச் சாரதி யானைக்கு ---.
10. உலோகங்களைப் பொன்னாக்கும் முயற்சி.
12. --- வாதும் வேதனை செய்யும்.
14. அதிர்ஷ்டம்.
15. உரத்துச் சத்தமிடுதல்.
16. மகிமை.
18. உபயோகம்.
20. மெல்லிய திரையாகப் பரந்திருப்பது. (குழம்பி)
21. சூறாவளி. அனுமனுக்கும் இது பெயர்.
22. சங்கம் வளர்த்த நகர்.
24. பெண். (தலைகீழ்)
25. அதிகம்.
27. நெருப்பில்லாமல் இது இல்லை.

### கு.எ.போட்டி-22 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. பயங்கரவாதம் | 1. பத்தாம்பசலி |
| 8. கால்கட்டு | 2. பூங்கா |
| 9. வடு | 3. கல்லறை |
| 10. தாம்பூலம் | 4. ரகம் |
| 11. மாநிலம் | 5. வாட்(டு) |
| 13. சுற்றம் | 6. தடுமாற்றம் |
| 14. பகல் | 7. சுடும் 9. வலம் |
| 18. (அ) றம் | 12. நிறம் |
| 20. சண்டமாருதம் | 15. கண்மணி |
| 22. எச்(சில்) | 16. பூதவுடல் |
| 23. மலிவு 24. உலை | 17. உருது |
| 25. அச்ச(ம்) | 19. ஆச்சரியம் |
| 26. காதணி | 21. தலைச்சுமை |
| 28. எரிச்சல் | 22. எச்சம் |
| 30. பூவரசு 31. லயம் | 25. அல்லல் |
| 32. திரை 33. மையல் | 27. காவல் 29. வீதி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**கே. ஞானசீலன்,**
**குவாரி றோட்,**
**தெகிவளை.**


பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:

1. வி. யாழினி,
   பாங்ஷோல் வீதி, கொழும்பு-11.
2. க. கமலாம்பிகை,
   13, கரப்பன்காடு, வவுனியா.
3. கு. கமலகுமார்,
   மன்னார் றோட், வவுனியா.
4. இராஜேஸ்வரி சிவசுந்தரம்,
   198, கோவிலடி, மஸ்கெலியா.
5. சி. ஜோர்ஜ்குமார்,
   கோணேசபுரம், திருகோணமலை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

### அன்றும் இப்படித்தான்



மாடு மணியடித்ததற்கு
நீதி வழங்கினான்
ஒரு மன்னன்.
மயிலின் குளிருக்கு
போர்வை தந்தான்
ஒரு ராஜா.
முல்லைக்குத் தேர் தந்தான்
ஒரு அரசன்.
கழுகுக்கு உணவாக
தராசில் உட்கார்ந்தான் சிபி.
எந்த அரசனும்
மனிதர்களுக்கு
எதுவும் தரவில்லை
இப்போது போலவே.

– தேவகுமார் (நன்றி: கணையாழி)

படிப்பகம்

www.padippakam.com



# மன்னாரிலிருந்து....

சொலமன் தேசிங்கு




## நிம்மதியாய் வாழ கிடைக்குமா தீர்வு?

வடக்கு கிழக்கில் மீள்குடியேற்ற வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் மீள்குடியேற்ற மாதிரிக் கிராம திறப்பு விழாக்களும், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளும் கோலாகலமாக கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், தலைமன்னார் பகுதி மக்கள் பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், தொழில் செய்யும் சுதந்திரம் போன்ற அடிப்படைச் சுதந்திரங்கள்கூட கிடைக்காமல் அரசபடைகளின் அடக்குமுறைகளாலும், புலிகளின் மக்கள் விரோத செயல்களாலும் சொல்லொணாத் துன்பத்தில் உழன்று கொண்டிருப்பது அரசுக்கு தெரியுமா? அல்லது வடக்கு கிழக்கின் தமிழ்க் கட்சிகளுக்கு புரியுமா? தேர்தல் காலத்தில் வீடு வீடாக வாக்கு வேட்டைக்குச் சென்ற வன்னித் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட விளங்குமா?

## தரையிலும் தாவும் கடற்படை தளம்

மன்னாரில் தள்ளாடி இராணுவ முகாம் பற்றி யாவரும் அறிவர். ஆனால் தலைமன்னார் துறையில் பாரிய அளவில் உருவாக்கப்பட்டிருக்கும் கடற்படை முகாம் பற்றி பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இது கடற்படையினரின் பயிற்சி முகாமாகவும் செயற்பட்டு வருகின்றது. தலைமன்னார் துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் இம் முகாமின் பூரண கட்டுப்பாட்டில் இயங்கினாலும், சுமார் மூன்று கிலோ மீற்றர் சுற்றளவில்உள்ள தலைமன்னார் கிராமம் வடக்கு, தெற்கு கிராம அலுவலர் பிரிவு, தலைமன்னார் ஸ்ரேசன், கட்டுக்காரன் குடியிருப்பு பகுதி வரை இது தரைப்படையா அல்லது கடற்படையா என்று திணறும் அளவுக்கு அதன் தர்பார் நடக்கிறது. கடற்படையினர் இம்மக்களைக் கொத்தடிமைகள் போல் நடத்திவருகின்றார்கள்.

இப்பகுதியில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனை மரங்கள் தலைமன்னார் கடற்படை தளம் அமைப்பதற்கு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. அத்துடன் பிற இடங்களுக்கும் காப்பரண் அமைக்கும் நோக்கத்துடன் கடற்படை கப்பல்களில் இப் பனைமரங்கள் ஏற்றி அனுப்பப் பட்டுள்ளன. இதில் கொடுமை என்னவென்றால், இப்பகுதி மக்களைக்கொண்டே இவ்வேலைகளைக் கடற்படையினர் செய்கின்றனர். எனினும் ஒரு சதமேனும் ஊதியம் கொடுப்பதில்லை. ஆனால் அவர்கள் இவ்வேலைகளுக்காக பாதுகாப்பு அமைச்சிடமிருந்து நிதி பெற்றுக் கொள்வார்கள். ராமேஸ்வரம்-தலைமன்னார், கப்பற்சேவை நடந்த இடத்தில் பனை மரங்கள் ஏற்றப்பட்டு வருகின்றது.

## மின் உண்டு கம்பங்கள் இல்லை

ஒருசில வருடங்களுக்கு முன் பல மில்லியன் செலவில் தலைமன்னார்-மன்னார் வீதியில் பாரிய மின்விநியோகத் திட்டத்தின் கீழ் மரத்தாலான மின்கம்பங்களும் உயர் மின்வலுக் கொண்ட கம்பிகளும் பொருத்தப் பட்டன. இம் மின்கம்பங்களைக் கூட கடற்படையினர் மக்களைக் கொண்டு வெட்டி தமது தேவைகளுக்கு பயன்படுத்தினர். மின் கம்பிகள் வீதியோரம் அநியாயமாய் விழுந்துகிடக்கிறது. இன்று மின் பிறப்பாக்கிகள் இருந்தும் இப்பகுதி மக்களுக்கு மின்சாரம் கிடைக்க முடியாத அவலநிலை.

## வாரம் ஒருநாள் கூலியற்ற வேலை

தலைமன்னார் கிராமம், தலைமன்னார் பியர், தலைமன்னார் ஸ்ரேசன் பகுதி மக்களை ஒவ்வொரு ஞாயிறு தோறும் அழைத்து படையினர் வேலை வாங்குவார்கள். வேலை செய்யும் மக்களுக்கு உணவோ ஊதியமோ வழங்கப்படுவதில்லை. தொழில் செய்ய, கூட்டம் கூட, சுதந்திரமாகப் பேச அனுமதி யில்லை.

இப்பகுதி மக்கள் பெரும்பாலும் கடற்றொழில்-செய்பவர்களே. இவர்கள் தம் விருப்பத்துக்கு கடலில் தொழில் செய்ய முடியாது. கடற்படையினர் அனுமதித்தால் தொழில் செய்வார்கள். படையினர் சாதாரணத் தேவைகளை காரணங்காட்டி தொழில் செய்ய அனுமதிக்க மாட்டார்கள். உதாரணமாக, இப்பகுதிகளில் புலிகள் திடீரென பிரவேசிப்பார்கள். அதனைத் தமக்கு அறிவிக்கவில்லை என்று கூறி மக்களைத் தாக்குவதோடு தொழில் செய்யவும் அனுமதிக்க மாட்டார்கள். மேலும் சுகயீனம் காரணமாகவோ வேறு அவசர நிமித்தத்தாலோ முகாமுக்கு வேலைக்கு செல்ல முடியாவிட்டால் தொழில் அனுமதி இல்லை. இப்படி அற்ப காரணங்களுக்காக அன்றாடம் தொழில் செய்து வாழும் மக்களின் வயிற்றில் அடிப்பார்கள்.

## புலிப் பயத்திற்கு பலி மக்கள்

கூட்டம் கூடி கதைக்க முடியாது. ஏதோ தமக்கு எதிராக திட்டம் போடுவதாக படையினர் சந்தேகித்து, கூட்டம் கூடுவதற்கு அனுமதி இல்லை. இதற்கொரு உதாரணம், இப்பகுதியில் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில் இருக்கிறது. இவ்வம்மன் கோயில், பிரச்சினை காரணமாக நிர்வாகம் இன்றி அர்ச்சகர் இன்றி பூசைகளோ கிரியைகளோ நடைபெறுவதில்லை. இவ்வாலயத்தின் பக்கலில் பெருந்தொகையான இந்துக்கள் இருந்தும் பொதுக்கூட்டத்தைக் கூட்டி நிர்வாகத்தை தெரிவு செய்ய அச்சம் காரணமாக இப்பகுதி மக்கள் முன்வரவில்லை. எனினும் ஒருசிலர் முயற்சி செய்து 18.02.96 இல் கூட்டம் என்று அறிவித்தார்கள். ஆனால் கடற்படையினர் அன்றைய தினம் தமது முகாமில் வேலை இருப்பதாக கூறி எல்லோரையும் வேலைக் கழைத்துச் சென்று விட்டார்கள். பின்பு இப்பகுதி கிராம அலுவலரின் பெரும் முயற்சியின் பயனாக 25.02.96இல் கூட்டம் கூடி நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இப்பகுதியில் கிராம அலுவலர் அரச அறிவித்தல் ஒன்றை மக்கள் கூடும் இடமொன்றில் மக்கள் பார்வைக்காக ஒட்டிய போது, அவ்வறிவித்தலை அப்பகுதி மக்கள் உடனடியாகக் கிழித்தெறிந்து விட்டார்கள். புதிதாக மாற்றலாகி வந்த கிராம அதிகாரிக்கு ஆத்திரம் மேலிட இதற்கான காரணத்தை கேட்டபோது, கடற்படையினரின் கண்ணில் இந்த அறிவித்தல் பட்டுவிட்டால் தம் கதி அதோகதி என்றும், புலிகள் இவ்வறிவித்தலை ஒட்டுவதற்கு மக்கள் உதவியிருக்கிறார்கள் என்று கூறி, தம்மை கடற்படையினர் ஒருமுறை கண்மூடித்தனமாக தாக்கியதையும் ஒருவர் கூறினார். ஏற்கனவே படக்காட்சி நோட்டீஸ் ஒட்டி வேண்டிக் கட்டிக்கொண்டதையும் கேட்ட கிராம அலுவலர் அம்மக்களின் அச்சம் நியாயமானது என அறிந்துகொண்டார்.

## மற்ற இடங்களிலும் பயணம் மன்னார் போல்தானா?

மன்னார் மாவட்டத்தில் பெரு நிலப்பரப்பு, தீவுப்பகுதி என இரு நிலப்பகுதிகள் உண்டு. மன்னர் தீவுப்பகுதியில், பேசாலையை அடுத்துள்ள நடுக்குடாவில் இருந்து தலைமன்னார் கிராமம் வரை 'ஒரேவித நிர்வாகம்' நடைபெறுவதில்லை. ஏனெனில், இங்கு புலிகளின் நடமாட்டம் அதிகம். கடற்படையின் அத்துமீறல் அதைவிட அதிகம். இரு இராசாக்களின் அதிகாரப் பிடியில் அலைக்கழிந்து அல்லல் படுவது சாதாரண பொது மக்களே. தலைமன்னாரில் இருந்து மன்னார் 19 மைல்கள். இந்த 19 மைல்களைக் கடக்க பிரயாணிகளுக்கு எடுக்கும் நேரம் சுமார் 3 மணித்தியாலங்கள். இதில் 9 இடங்களில் படையினரின் சோதனைச் சாவடிகள். மக்கள் இறங்கி ஏற வேண்டும். இத்தனை சிரமங்களுக்கும் மத்தியில்தான் மக்களின் பிரயாணம்.

அண்மையில் தலைமன்னார் பஸ் ஒன்று பொலிசாரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு இலக்காகி பல பொதுமக்கள் கொல்லப்பட்டதும் நாடறிந்த விடயம். இவ்விதம் மக்கள் தங்கள் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு பிரயாணம் செய்ய வேண்டிய அவலநிலை. புலிகளின் தாக்குதலுக்கு தமது வாகனம் இலக்காகக் கூடும் என்பதால் பொதுமக்கள் பயன் படுத்தும் அரச பேருந்துகளையே தற்சமயம் படையினர் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள். மன்னார் டிப்போவில் குறைந்த அளவிலான பேருந்துகளே உள்ளன. இதனால் தலை மன்னார் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையே நடைபெறுகிறது. இந்த இலட்சணத்தில் படையினரும் பேருந்தைப் பயன்படுத்தினால் மக்களின் சிரமத்திற்கு எல்லை ஏது? 1990ம் ஆண்டின் பின் தலை மன்னார் வீதிகள் திருத்தப்படவே இல்லை. வீதிகள் எங்கும் குழிகள் விழுந்து காணப்படுவது சர்வசாதாரணம்.

## தென்னை பயிர் செய்! தேங்காயை கடையில் வாங்கு

தலைமன்னார் கடல்வளமும் பனைவளமும் மிகுந்த பகுதி. இவையே மக்களின் ஜீவ நாடி. இவர்களின் ஜீவாதார முயற்சிகளிலேயே படையினர் கைவைப்பது மிகுந்த கொடுமையானது. பல இடையூறுகளுக்கு மத்தியில் கடற்றொழில் செய்ய அனுமதி பெற்று, பிடித்துவந்த மீன்களை கடற்படையினர் கேட்டுக்கேள்வி இன்றி அள்ளிச் செல்வதும், கஷ்டப்பட்டு பதப்படுத்திய கருவாடுகளை எடுத்துச் செல்வதும் சாதாரண நிகழ்ச்சி. சில சமயங்களில் கப்பம் கட்டுவது போல் தாம் பிடித்த மீன்களையோ, கருவாடுகளையோ முகாமுக்கு எடுத்து வரும்படி சில மீனவர்கள் வற்புறுத்தப்படுவார்கள். மீறினால் அடி, உதை, என்று அவர்களின் 'நடவடிக்கைகளை' காட்டுவார்கள்.

தலைமன்னார் புழுக்கொடியல் (ஒடியல்) மிகப் பிரசித்தமானது. வறுமைப்பட்ட குடும்ப பெண்களின் வீட்டுக் கைத்தொழில், ஒடியலைப் பதப்படுத்தி விற்பனை செய்வதேயாகும். இந்த ஒடியலைக்கூட படையினர் அள்ளிச் சென்று விடுகிறார்கள். இதற்கு பணம் கொடுக்கும் சிந்தனையே கிடையாது. இன்று மன்னாரில் ஒரு தேங்காயின் விலை 10 ரூபாவை விட அதிகமே. அப்படி இருக்க இங்குள்ள மக்கள் தமது சொந்த காணியில் உள்ள தென்னைகளுக்கு கையாலே நீர் இறைத்து (இயந்திரம் பாவிக்க பெற்றோல், ஒயில் எடுக்க கடினமாகையால்) வளர்ந்த தென்னை மரங்களில் குலைகுலையாக இளநீர் வெட்டி குடிப்பதும் படையினருக்கு வாடிக்கை. இதனால் தென்னை மரங்கள் இருந்தும் தேங்காய் வாங்கும் தோட்டக்காரர்களின் மனக்கொதிப்பு யாருக்குப்புரியும்?

## வருந்தத்தக்க வைத்தியசாலை

தலைமன்னார் வைத்தியசாலை முக்கியத்துவம் வாய்ந்த பழமையான வைத்தியசாலையாகும். இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் சேவை மிக அத்தியாவசியமான விடயமாகும். இவ் வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் ஒன்று வாங்கிவிடப் பட்டிருந்தது. இதனால் மக்கள் மிகுந்த நன்மையடைந்தனர். ஆனால் திடீரென மன்னார் எம்.ஓ.எச். இன் பொறுப்பற்ற செயலால் அம்புலன்ஸ் சேவை நிறுத்தப்பட்டது. தற்போது இவ் வைத்தியசாலையில் உள்ள மருத்துவ தாதியையும் எம்.ஓ.எச். வெளிக்கள வேலை செய்யுமாறு பணித்துள்ளதால் இவ்வைத்தியசாலைக்கு வரும் மகப்பேறு தாய்மார்கள் மிகுந்த பரிதவிப்புக்கு உள்ளாகிறார்கள். வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கும் எம்.ஓ.எச். க்கும் இடையிலான நிர்வாகப் பலப் பரீட்சையே மக்களுக்கு இந்தளவு சீரழிவைத் தந்துள்ளது. மன்னார் எம்.ஓ.எச். தமது கடமையை ஒழுங்காக செய்வதில்லை என்றும் அவர் தமது சொந்த மருத்துவமனையிலேயே குறியாய் இருப்பதாகவும் மன்னாரில் பரவலான அபிப்பிராயம். இதை உறுதிப்படுத்துவது போலவே தலைமன்னார் வைத்தியசாலையின் சீர்கேடுகள் சான்று பகர்கின்றன.



"மேய்ச்சல் நிலத்திலிருந்து வாத்தினைத் திருடும் ஆணையோ பெண்ணையோ சட்டம் தண்டிக்கிறது. ஆனால் வாத்திடமிருந்து மேய்ச்சல் நிலத்தைத் திருடும் குற்றவாளியை விட்டுவிடுகிறது"

தாமஸோ கேம்பனெல்லா




# யாழ்ப்பாணத்திலிருந்து....

## கிடைத்த செய்திகள் தொகுப்பு: நாகலிங்கம் திலீபன்

### காட்டிக் கொடுக்கும் போராளி அட்டைகள்

யாழ்ப்பாண மக்களுக்கென அங்குள்ள அரச அதிபரால் குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்படுவது வழக்கம். இக் குடும்ப அட்டைகள் மூலமே மக்கள் தமது நிவாரணப் பொருட்கள் மற்றும் வாராந்தம் அரசு கொடுக்கும் பங்கீட்டு உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இக் குடும்ப அட்டைகளில் புலிகளின் போராளி குடும்ப அடையாள அட்டைகளின் மேற்பகுதியில், "போராளி குடும்பம்" என புலிகளால் குறிக்கப்படுவதுண்டு. அதன் மூலம் இப்போராளி குடும்பங்கள் பல சலுகைகளைப் பெற்றுவந்தன.

ஆனால் புலிகளின் இந் நடவடிக்கைகள் இப்பொழுது அம் மக்களுக்கே ஆபத்தாக முடிந்துள்ளது.

போராளி குடும்ப அட்டைகள், என எழுதப்பட்ட குடும்பங்களில் இருக்கக்கூடிய 12-25 க்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பிரத்தியேக முகாம்களில் வைக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது. இவர்களைப் பெற்றோரால் சந்திக்க முடியவில்லை என்றும் அறியப்படுகின்றது. அன்று புலிகள் தமது தேவைக்காக செய்து கொண்டவை இன்று இராணுவத்திற்கு சாதகமாக அமைந்துள்ளது.

### கைவண்ணம் கண்டு கலங்கிய பெண்மணி

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வாழ்ந்த ஓர் குடும்பம் இராணுவம் தென்மராட்சியை கைப்பற்றியதும், இவர்களும் மீண்டும் தமது வீட்டிற்கு சென்றனர். வீட்டிற்கு போகுமுன்னர் போகும் வழியெல்லாம் வீடு உடைந்திருக்கக் கூடாது என சகல தெய்வங்களையும் வேண்டுதல் செய்து கொண்டே அப் பெண்மணி போனாராம் வீட்டிற்கு சற்றுத் தொலைவில் போகும்பொழுதே வீட்டுக் கூரையைக் கண்ட அவர், எல்லாத் தெய்வங்களுக்கும் நன்றி சொன்னாராம். வீட்டிற்குள் போனதும் பெரிய அதிசயமே அவருக்கு காத்திருந்தது. வீடிருக்குமா என புலம்பிச் சென்றவருக்கு வீட்டிற்குள் போனதும் ஓர் அறை நிறைய தொலைக்காட்சிப் பெட்டிகளும், டெக்கும், இன்னொரு அறைநிறைய சுவர் மணிக்கூடுகளும் இன்னும் பல பொருட்களும்.... திகைத்து நின்ற அப் பெண்மணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இவ்வளவு பொருட்கள் இருந்த அவ்வீட்டில், அவ்வீட்டிற்கு சொந்தமான தளபாடங்களோ, பொருட்களோ ஒன்றுகூடஇருக்க வில்லை. எல்லாம் புலிகளின் கைவண்ணம். சகல வீடுகளிலும் இருந்து எடுத்த பொருட்களை அங்கே குவித்த புலிகளால் போகும்போதுஅவற்றை எடுத்துச் செல்ல முடியவில்லையாம்.

### அங்கே நடப்பது அவரன்றி யாரறிவார்?

இப்போ யாழ்ப்பாணத்தில் நடக்கும் கொலைகள் யாவும் கத்திக் குத்து கொலைகளாகவே உள்ளன. கச்சாயில் கற்பழிக்கப்பட்ட பெண்மணி ஒருவரும் அவரது கணவனும் அப்படிக் கொல்லப் பட்டனராம். பின்னர் வரணியில் 3 பெண்களும் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளனராம். புலிகள்தான் இவற்றை செய்தது என இராணு வம் கூறுகின்றது; இராணுவம் செய்ததாக புலிகள் கூறுகின்றனர். யார் இவற்றை செய்கின்றார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

### இறந்தவரைச் சுமந்த இடமும் மறைகிறது

புலிகளின் மாவீரர் மயானங்கள் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றனவாம். புலிகள் குடாநாட்டின் பல பாகங்களில் இறந்துபோன தமது புலி உறுப்பினர்க்காக மாவீரர் மயானங்களை அமைத்து வந்தனர். பெரும் பொருட் செலவில் கவர்ச்சிகரமாக உருவாக்கப்பட்டு வந்த இந்த மாவீரர் மயானங்கள் இராணுவத்தால் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றதாம். கோப்பாயில் அமைக்கப்பட்டிருந்த இவ்வகையான மயானங்களில் ஒன்று இருந்த இடமே இல்லாமல் போயுள்ளதாம்.

### தமிழ் மக்கள் தெரிவு சிங்கள ராணுவமாம்!

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் தனது வெண்தாமரை இயக்கத்தின் கிளை ஒன்றை அண்மையில் திறந்துள்ளது. அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள் மற்றும் சமாதானக் குழுக்களின் அங்கத்தவர்களும் கொழும்பில் இருந்து சென்று இதில் கலந்து கொண்டனர். வெண்தாமரை இயக்கம், அங்கிருந்த அகதி மக்களுக்கு அன்பளிப்பாக உடுபுடவைகள் கொடுத்ததுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ் கட்சிகள் யாழ்ப்பாணம் சென்று வேலை செய்வதை யாழ் மக்கள் விரும்பவில்லையென ஜனாதிபதியும், அங்குள்ள இராணுவத்தினரும் தெரிவித்து வருகிறார்கள். அப்படியானால், இராணுவம் போனதையும் வெண்தாமரை இயக்கம் போனதையும் மக்கள் விரும்பிக் கேட்டார்களா?

### நகருக்குள்ளிருந்து கடல் பார்க்கலாம்

யாழ்ப்பாணத்தின் கோட்டையும், பொதுநூலகமும், சுப்பிரமணியம் பூங்காவும், அதனைச் சூழ உள்ள பிரதேசங்களும் ஏறத்தாழ ஒரு சிறு காடாகவே காட்சியளிக்கின்றதாம். யாழ்நகரில் இருந்து பார்த்தால் கடற்கரை தெரியுமளவிற்கு எல்லாமே தரைமட்டம் தானாம். மத்திய கல்லூரி மைதானமும் இதற்கு விதிவிலக்கல்ல.

### 'தலைவரை'த் தவிர்ந்த எல்லோரும் காக்கை வன்னியர்கள்தானா?

யாழ்ப்பாணத்தில் புலிகளை அடையாளம்காட்ட புலிகளுடன் இருந்து இராணுவத்திடம் சரணடைந்த மாத்தையாவின் விசுவாசிகள் உதவி வருகின்றனராம். ஏறத்தாழ 200இற்கு மேற்பட்ட மாத்தையாவின் விசுவாசிகள் இவ்வேலைகளைச் செய்து வருகின்றனர். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தமிழ் இயக்கங்கள் யாழ் குடாநாட்டில் இல்லாததால் இவர்களின் உதவியை இராணுவம் நாடவில்லையாம். மாறாக யாழ்ப்பாணத்தில் இறுதிவரை இருந்த புலிகளால் பலரை இனங்காட்டக் கூடியதாக உள்ளதாம். முன்னர் முழுப் புலிகளும் அதிரடிப்படையுடன் இணைந்து தமிழ் தேசிய இராணுவத்தை தாக்கினார்கள். இன்று புலிகள் இராணுவத்துடன் இணைந்து புலிகளையே தாக்குகின்றார்கள். வாழ்க! புலிகளின் ராஜதந்திரம்.

---



# ஜனநாயகச் சூழலைக் கொண்டுவர பத்திரிகைச் சுதந்திரம் முக்கியம் அல்லவா!

ஜனாதிபதி மக்கள் சீனாவுக்கு பயணப்பட்டிருந்த வேளையில் இங்கு தென்மராட்சியில் சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தது.

ஏற்கனவே அரச படையினரால் கைப்பற்றப்பட்ட வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களை புலிகளின் பிடியிலிருந்து மீட்பதே பிரதான நோக்கம் எனக் கூறப்பட்டது. அரசு குறிப்பிடத்தக்களவு வெற்றியும் பெற்றுள்ளது.

ஆனால் சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கைகளின் போதோ அதற்கு முன்னரோ பின்னரோ, அங்கு நடப்பவற்றை வெளி உலகம் அறிந்து கொள்ள முடியாத ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ் மக்கள் தமது நிலையை வெளி உலகுக்குத் தெரிவிக்க முடியாத நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கேற்பட்ட உயிர்-உடமைச் சேதாரங்கள், அகதிகளாக இடம்பெயர்க்கப்பட்டபோதும், பிற இடங்களில் அகதிகளாக அவர்கள் வாழ்ந்த போதும் அனுபவித்த அவலங்கள், இராணுவ நடவடிக்கைகளின் தாற்பரியங்கள் எல்லாவற்றையும் இயலுமானவரை இருட்டடிப்புச் செய்யும் நோக்கமாகவே தகவல் தொடர்பு சாதனங்கள் மீது தடைபோடப்பட்டது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

ஜனநாயகம் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பற்றி வாய்கிழியப் பேசி பதவிக்கு வந்த பொதுஜன முன்னணி அரசு, தகவல் தொடர்பு துறைக்கென அமைச்சொன்றையே வைத்திருக்கிறது. இவையெல்லாம் மக்களை ஏமாற்றும் வேலையோ என ஐயுறும் அளவுக்கே அரசின் செயற்பாடுகள் அமைகின்றன.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் – அரசின் ஊதுகுழல்களாகச் செயற்படும் தகவல் தொடர்புச் சாதனங்கள் சொல்பவற்றையும், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் – புலிகளின் ஊதுகுழல்களாக அல்லது கைப்பாவையாக செயற்படும் ஈழநாதம், உதயன், ஈழநாடு போன்றவை சொல்பவற்றையும்தான் அறியமுடியும்.

சுதந்திரமான தகவல் சேகரிப்பு, பத்திரிகையாளர் செயற்பாடு என்பதற்கு இங்கு இடமே இல்லை. ஜனாதிபதி சந்திரிகா அவர்களிடம் ஓர் இந்தியப் பத்திரிகையாளர், பத்திரிகையாளர்கள் ஏன் அனுமதிக்கப் படுவதில்லை என்று கேட்டதற்கு தற்போது மழைகாலம் என்றும், மழை நிற்க அனுமதிப்போம் என்றும் கூறியுள்ளார். இந்த சமாளிப்புக்களை நினைக்க சற்று வேடிக்கையாகவும் இருக்கிறது.

கீழ்த்தரமான இனவாத பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு பெரும்பாலான சிங்கள, ஆங்கில பத்திரிகைகளுக்கு பரிபூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. ரூபவாஹினியில், நேரடியாக இனவாதம் பேசப்படாவிட்டாலும் அதில் தமிழ் நிகழ்ச்சிகள் கண்துடைப்பாகவே இடம்பெறுகின்றன. பிறிதொரு நாட்டு நிகழ்ச்சிகளுக்கு செய்திகளுக்குள்ள முக்கியத்துவம் கூட அதில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குக் கொடுபடுவதில்லை.

அரசபடைகள், பொலிசினால் இழைக்கப்படும் கொடுமைகள்பற்றி அது மூச்சுக் காட்டுவதில்லை. அது உண்மையில் பேரினவாத வாஹினியே!

அரச ஊதுகுழல்களிடம் நாம் எப்படி சுதந்திரமான கருத்துக்களை எதிர்பார்க்க முடியும் என்று ஒருவர் கேட்கமுடியும். ஆனால் பத்திரிகைத் துறைகளின் சுதந்திரத்தை முக்கியமான விடயமாக வலியுறுத்தி, கடந்த அரசினால் தகவல் தொடர்புத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட கெடுபிடிகள், அரச தொலைக்காட்சி சேவையின்– ஏரிக்கரைப் பத்திரிகைகளின் கைப்பாவைச் செயற்பாடுகளை விமர்சித்தே பதவிக்கு வந்தார்கள்.

ஆனால் இன்று இவை செயற்படும் முறை முன்னரைவிட எவ்வித மேலான நிலையைக் கொண்டதாகவும் இல்லை. அரசின் புலனாய்வுத் துறையினர் இன்று தமிழர்களின் கருத்துக்களையெல்லாம் அறியும்படி பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் பல சிறுபான்மை இனங்களுக்கு விரோதமாக விஷத்தைக் கக்கும் போது, கேலிச் சித்திரங்கள் வரையும் போது, இங்கு தமிழர்களின் எழுத்துக்கள் கழுகுக் கண்களால் பார்க்கப்படுகின்றன.

அறிவுஜீவிகள் தமது எழுத்துக்களுக்காக துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாடு எத்தகைய ஒரு காட்டுமிராண்டி நிலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

இராணுவம், பொலீஸ், உளவுத் துறை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரம்பற்ற அதிகாரம் சமுதாயத்தின் மதிப்பு வாய்ந்த அங்கங்கள் மீதெல்லாம் அத்துமீறிச் செயற்படுவதற்கான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. பொதுஜன முன்னணியோ தீக்கோழிபோல் தலையை மண்ணுக்குள் மறைக்க முயல்கிறது.

**பிற்குறிப்பு:** இந்தப் பத்தி எழுதியதற்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்குப் பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் இராணுவத்தால் தேர்வு செய்யப்படும் இடங்களுக்கே சென்றுவர முடிகிறது.

சுதந்திரமான செயற்பாட்டிற்கான நிலைமை இதுவரை இல்லை. அங்குள்ள நிலவரம் பற்றி மங்கலான தெளிவற்ற பூரணமற்ற செய்திகளே தெற்கிலும் பிற இடங்களிலுமுள்ள தமிழ் மக்களுக்கு இதுவரையில் கிடைத்திருக்கிறது.



**உள்ளமுறுத் துரையர்**

---

## இந்திய அரசியல்....

(முன்பக்கத் தொடர்ச்சி)

புலிகளைப் பொறுத்தவரை, இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக இருக்காவிட்டால் தாம் தமிழீழத்தைப் பெற்று விடுவோம் என இன்றும் மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் புலிகளின் அணுகுமுறைகள் எமது போராட்டத்தையே சீரழித்து விட்டதென்பதே வரலாறு.

ராஜீவ்காந்தியை கொலை செய்ததன் மூலம், புலிகள் தம்மை மாத்திரமல்லாமல், முழுத் தமிழ் மக்களையுமே அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்நிலையில் புலிகளின் கோரிக்கைகளுக்கும், தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களுக்கு நீதியான ஓர் தீர்வு கிடைக்க இந்தியா உதவி செய்ய வேண்டுமென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியும், மற்றும் தமிழ் மக்களும் இன்றுள்ள இலங்கைச் சூழ்நிலையை சரியாக எடைபோட்டுள்ளார்கள் என்றே நம்புகின்றோம். இந்நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண டெல்லியை கலைஞர் வற்புறுத்துவார் என நம்பலாம். ●

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்கள் இவ்வளவு காலமும் பல்வேறு இழப்புக்கள் அழிவுகளுக்கு முகம் கொடுத்து போராடியது மின்சாரத்திற்கும், தொலைபேசிக்கும், போக்குவரத்து வசதிகளுக்கும் இல்லை. இவை அனைத்திற்கும் மேலாக, ஒரு இனம் என்ற அடிப்படையில் இந்த நாட்டின் கௌரவமான பிரஜைகளாக வாழ வேண்டும் என்பதற்காகவே போராடினார்கள். அனைத்தையும் தாங்கிக் கொண்டார்கள்.

# வசதிகள் முக்கியம்தான் ஆனால் மனிதர் தேவை அது மட்டுமில்லை



ரிவிரச மூன்றாம் கட்டமும் முற்றுப் பெற்றுவிட்டது. முதற் கட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள், இரண்டாம் கட்டத்தில் புலிகளின் அறிவுறுத்தல்கள் எச்சரிக்கைகளையும் மீறி சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, பூநகரி இராணுவ முகாமை போக்குவரத்துப் பாதையிலிருந்து 500 மீற்றர் நகர்த்துவதற்கு அரசு சம்மதம் தெரிவித்தது.

இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த புலிகள். இராணுவ மூகாம் அகற்றப்படவில்லை, பாதை திறந்துவிடப்படவில்லை என்பதையும் ஒரு குற்றச்சாட்டாக சொல்லி, யுத்த நிறுத்தத்தை மீறி பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டார்கள்.

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதில் பிடிவாதமாய் நின்ற புலிகள், இன்று யாழ் குடாநாட்டையே இராணுவ முகாமாக்கி தமிழ் மக்களை பரிதாபகரமான நிலைக்கு தள்ளியதோடு தாமும் பரிதவித்து நிற்கிறார்கள்.

இன்று அரசின் நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க இராணுவ பலமுமின்றி, அரசியல் பலமுமின்றி அனைத்தையும் பறிகொடுத்த நிலையில், யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த இந்தியா உட்பட வெளிநாடுகளின் உதவியை நாடியுள்ளார்கள்.

இதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமக்கு சார்பான அமைப்புக்களை களத்தில் இறக்கி அவற்றுக்கூடாக ஓர் அழுத்தத்தை ஏற்படுத்த முனைந்துள்ளார்கள்.

'மரபுப் போர்முறைக்கும் புலிகளின் படை தயாராகிவிட்டது. வானமும் இனி எங்கள் வசம்' என்று புலிகள் கூறியதை நம்பியிருந்த மக்களுக்கு புலிகள் பின்வாங்கிச் சென்றது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்திருக்கிறது.

விடுதலைப் போராட்டத்தின் பேரால் புலிகள் செய்துமுடித்த- செய்து வருகின்ற அத்தனை அராஜக நடவடிக்கைகளுக்கும் நியாயம் கற்பித்து புலிகளின் வாலை நுள்ளி விட்டவர்கள், இப்போ புலிகள் இடறி விழுந்ததும் முதல் கல்லை எறிபவர்களாகியிருக்கிறார்கள்.

'புலிகள் தப்பி ஓடுகிறார்கள், அவர்களை தமிழ் மக்களிடமிருந்து அப்புறப்படுத்திவிட்டோம்' என்று அரசாங்கம் தப்புக் கணக்கு போடுவது போல் நாமும் எண்ணிவிட முடியாது. புலிகள் தமது அணிகளுக்கோ ஆயுத தளபாடங்களுக்கோ இழப்புகளின்றி, பின்வாங்கிச் சென்றிருப்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் காத்திருக்கிறது என்பதையே எடுத்தியம்புவதாயுள்ளது.

இந்நிலையில் மின்சாரம், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி போன்றவற்றை வழங்கிவிட்டால், தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விடுவார்கள் என்ற ஒரு பொய்த் தோற்றம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மின்சாரமும், போக்குவரத்து வசதிகளும், தொலைபேசிகளும் பாவனையில் இருந்த சமயத்தில்தான் விடுதலைப் போராட்டம் முளைவிட்டது என்பதை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கிருந்த வசதி வாய்ப்புக்கள், அத்தியாவசிய சேவைகள் அனைத்தையும் சிதைத்து சின்னாபின்னப்படுத்தி, தமிழ் மக்களை வீணான நெருக்கடிகளுக்குள் தள்ளினார்கள் புலிகள்.

பதவிக்கு வந்த அரசாங்கங்களும், தம் பங்கிற்கு வெட்ட வேண்டியதை வெட்டி நிறுத்த வேண்டியதை நிறுத்தி மேலும் மேலும் தடைகளை விரிவுபடுத்திக் கொண்டே சென்றது. இன்று அரசாங்கம் தனது பரிபாலனத்தின் கீழ் உள்ள பிரஜைகளுக்கு அவற்றைத் திரும்ப வழங்குவதில் பிரமிக்கத்தகு மாற்றம் என்ன இருக்கிறது? இளவரசன் உமியைக் கொடுத்ததால், பதரைக் கொடுத்த அரசன் கூட குடிமக்களுக்கு நல்லவனாய் தெரிந்த கதைதான். இதில் வியந்து பாராட்ட எதுவுமில்லை.

விடுதலைக்காக போராடும் ஒரு படை மக்களுக்கு செய்திருக்க வேண்டிய சேவைகளை புலிகள் சிதைத்து சின்னாபின்னப்படுத்தி விட்டார்கள். அவற்றை எதிர்பார்த்து ஏங்கும் நிலைக்கு மக்களைக் கொண்டு சென்றதும், அவற்றை புனரமைத்து சீரமைக்கும் பணிகளை எதிரிப் படைகளிடமே விட்டு விட்டதும் புலிகளின் தொலைநோக்கற்ற நடவடிக்கைகளே!

புலிகள் தமிழ் மக்களுக்கு வீணான நெருக்கடிகளை ஏற்படுத்தினார்கள். இதனால் தமிழ் மக்களிடம் கணிசமான வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்கள். அவர்கள் இன்னும் இதனை உணர்ந்திருப்பதாய் தெரியவில்லை.

இதனை உணர்ந்திருந்தால் தொடர்ந்தும் கிழக்கு மாகாணத்தில் மின்மாற்றிகளை தகர்த்து, கிழக்கு மாகாண மக்களையும் இருளில் மூழ்கடிக்க எண்ணியிருக்க மாட்டார்கள்; புகையிரதத்திற்கு குண்டு வைத்து புகையிரத சேவையை தடைப்படுத்தி, கிழக்கு மாகாண மக்களின் போக்குவரத்திற்கும் இடையூறு விளைவிக்க முனைந்திருக்க மாட்டார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் முன்னணிப் படையும், மக்களும் பல்வேறு துன்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

ஆனால், புலிகள் மக்களுக்கு வீணான நெருக்கடிகளை தோற்றுவித்து அவர்களை கசக்கிப் பிழிந்தார்கள். தமது அவஸ்தைகளை வெளியே சொல்லக்கூட புலிகள் அவர்களை அனுமதித்ததில்லை.

மக்கள் எதைப் பேச வேண்டும், எதைக் கேட்க வேண்டும், எதைப் பார்க்க வேண்டும் என்று எல்லாவற்றையும் புலிகளே தீர்மானித்தார்கள். இவற்றிலிருந்தெல்லாம் எப்போது விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கம் வடபகுதி மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலேயே அவர்கள் இப்போ கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, தமிழ் மக்கள் இராணுவத்தின் பின்னே வந்துவிட்டதாக கருதுவது வீண் பெருமை. தமிழ் மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பியிருக்கிறார்கள் அவ்வளவு தான். அவர்கள் புலிகளின் யுத்தத்தை ஆதரிப்பதா? அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்விற்கு ஆதரவளிப்பதா? என்பது அரசாங்கம் இனிமேல் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

தமிழ் மக்கள் இவ்வளவு காலமும் பல்வேறு இழப்புக்கள் அழிவுகளுக்கு முகம் கொடுத்து போராடியது மின்சாரத்திற்கும், தொலைபேசிக்கும், போக்குவரத்து வசதிகளுக்கும் இல்லை. இவை அனைத்திற்கும் மேலாக, ஒரு இனம் என்ற அடிப்படையில் இந்த நாட்டின் கௌரவமான பிரஜைகளாக வாழ வேண்டும் என்பதற்காகவே போராடினார்கள். அனைத்தையும் தாங்கிக் கொண்டார்கள்.

எனவே, இவற்றைச் சரிவரப் புரிந்து கொண்டு அந்த உரிமைகளை வழங்க தயாராக உள்ள ஒரு அரசாங்கமே இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியும். பசித்தவனுக்கு உணவு அவசியம்; ஆனால் பசிக்கு உணவு கிடைத்ததும் அவன் தனது இதர தேவைகளை மறந்துவிடுவான் என்று யாராவது எண்ணினால் அந்த திருப்தி தற்காலிகமானதே.

விடுதலைப் போராட்டத்தின் பேரால் புலிகள் செய்துமுடித்த- செய்து வருகின்ற அத்தனை அராஜக நடவடிக்கைகளுக்கும் நியாயம் கற்பித்து புலிகளின் வாலை நுள்ளி விட்டவர்கள், இப்போ புலிகள் இடறி விழுந்ததும் முதல் கல்லை எறிபவர்களாகியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் இராணுவத்தின் பின்னே வந்துவிட்டதாக கருதுவது வீண் பெருமை. தமிழ் மக்கள் தமது சொந்த வீடுகளுக்கு திரும்பியிருக்கிறார்கள் அவ்வளவுதான். அவர்கள் புலிகளின் யுத்தத்தை ஆதரிப்பதா? அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்விற்கு ஆதரவளிப்பதா? என்பது அரசாங்கம் இனிமேல் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.

## ஆப்பு இழுத்த புலி..... (7ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான காரணங்களால் புலிகள் மக்களை மிரட்டி வெளியேற்றியிருக்கிறார்கள். மக்கள் யாரும் விரும்பி வெளியேறவில்லை இவ்வாறு கொண்டு சென்ற மக்களை எவ்வளவுகாலம் புலிகளால் வைத்திருக்கமுடியும்? அகதிகள் புனர்வாழ்வு என்று மக்களுக்கு காணியும்பணமும் கொடுத்து விவசாயம்செய்யும்படி 'மீண்டும் அடிப்படைகளுக்கு' செல்லுமாறு கேட்கிறார்கள். மிளகாய் 32 ரூபா என்பதற்காக விசுவமடுவில் காடுவெட்டி பயிர் செய்த நம்மவர்கள் அங்கு இந்தியக் குடும்பங்களை கூலிக்கு அமர்த்திவிட்டு விளைபொருளை அறுவடை செய்ய மட்டுமே சென்றிருக்கிறார்கள். இவ்வாறான வாழ்க்கை முறையில் வாழ்ந்தவர்களை திடீரென்று காட்டைக் கழனியாக்கும்படி கூறினால்....

......அவ்வாறான மனநிலையும் வாழ்க்கை முறையும் கொண்டவர்களை நிரந்தரமான அகதி வாழ்வில் வைத்திருப்பது சாத்தியமானதா? புலிகளின் ஆதரவாளர்கள் முதல்கொண்டு சாதாரண மக்கள் வரை ஒரே அகதி வாழ்க்கைக்கு தள்ளப்பட்டது பிரச்சினைகளை உருவாக்கும்....கடைசியாக இந்த மக்களைகொண்டு கிளிநொச்சியில் ஊர்வலம் வைத்து உணவு அனுப்பும்படி சிங்கள அரசைக் கேட்கத்தான் புலிகளால் முடியும். ஒருவேளை பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் பல சிறுவர்களை இயக்கத்தில சேர மறைமுகமான நிர்ப்பந்தத்தை புலிகள் ஏற்படுத்துவதில் வெற்றி காணக்கூடும். ஆனால் இது மக்களிடமிருந்து மேலும் புலிகள் அந்நியப்படுவதற்குத் தான் வழிவகுக்கும்.

அடுத்தகட்டத்தில் புலிகளுக்கு இன்னும்சிக்கல்கள் எழலாம். அதிலும் வடமராட்சி வாழ் மக்களை இராணுவத் தாக்குதலின்போது இடம்பெயர்ந்து அக்தி முகாம்களுக்கு செல்லும்படி கேட்கும்போதுதான் பிரச்சினை முழு அளவில் வெடிக்கும். அங்குள்ளவர்கள் சுலபமாக வெளியேறி போகப் போவதில்லை. பலர் அங்கேயே தங்கியிருக்க முடிவுசெய்தால், அப்போது புலிகள் தங்கள் வழமையானஅஸ்திரங்களை பிரயோகித்தால் அதன் விளைவுகள் விபரீதமாகத்தான் இருக்கும்.

இந்தமக்களின் மனப்போக்குத்தான் புலிகள் வெற்றிபெறவும் இதுவரை வழிவகுத்தது. எந்த அழிவுகளுக்கு மத்தியிலும் ஒரு முகாமை அழித்து ஒரு விமானம், கப்பலை வீழ்த்தினால் மக்கள் எல்லாவற்றையும் மறந்து புலிகளால்தான் விடிவு நிச்சயம் என்று நம்பிக் கொண்டிருந்தார்கள். அதைப்போல பேச்சுவார்த்தைகள் முறிந்தபோதுகூட தலைவர் யாழ் பெரியவர்களை(?) கல்விமான்களைஅழைத்து அவர்களின் கருத்தைக் கேட்டபோது.(அல்லது தன் கருத்தை அவர்களுக்கு சொன்னபோது) வீடு கொழுத்தும் ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள் போல, தலைவரை நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று எதிர்த்து நியாயத்தை சொல்வதற்கு துணியாமல், தலைவர் நெற்றிக் கண்ணைத் திறப்பார் என்றுதான் அந்த கல்விமான்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள்.....

......பலம் வாய்ந்த நிலையில் தங்களை சமமாக நினைக்க வைத்து பேச்சுவார்த்தை நடத்திய புலிகள், இன்று தோல்வி கண்டதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு கௌரவத்துடன், நியாயத்துடன் தீர்வு கிடைக்கக் கூடிய சந்தர்ப்பத்தை அழித்து விட்டார்கள். சமாதானத்திற்காக எங்களுக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம் ஒன்றை தவற விட்டதன் மூலம் இனிமேல் இராணுவத் தீர்வுக்குப் பின்னர் தான் அரசியல் தீர்வு, அந்த எண்ணப்பாடு சாத்தியமான ஒன்றே என சிங்கள அரசு நினைக்கவும் பேசவும் வழிவகுத்திருக்கிறது. அத்துடன் புலிகளை இராணுவ ரீதியாக இலகுவாக தோற்கடிக்க முடியும், இனி எதற்காக தமிழ் மக்களுக்கு உரிமை என்ற எண்ணத்தைக் கூட வரவைத்திருக்கிறது. மொத்தத்தில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் அல்ல. வெறும் வீசப்பட்ட எலும்புத் துண்டுகள்தான் தீர்வாக அமையும் என்பதை புலிகளின் தோல்வி காட்டியிருக்கிறது.

இந்த முட்டாள்த்னமான முடிவுக்கு புலிகளே பொறுப்பு. ஆப்பிழுத்த குரங்கு போல, தாங்களே தொடங்கிய ஒன்றுக்குள் அகப்பட்டு தவிக்கிறார்கள் புலிகள். மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்ட மோயீசனாக புலிகள் இங்கே காட்சியளிக்கவில்லை. மாறாக புல்லாங்குழல் ஒலியைக் கொண்டு எலிகளை கூட்டிச் சென்று ஒழித்த ஆங்கிலச் சிறுவனாகத்தான் புலிகள் இருக்கிறார்கள். மீளமுடியாத ஒரு படுகுழியில் தமிழ் மக்கள் இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு தோல்வியின் பின் நாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்றுண்டு.

தமிழ் மக்களின் இன்றைய பிரச்சினை தரப்படுத்தலோ, விமானத் தாக்குதலோ அல்ல. தீர்வுக்குத் தடையாகஇருப்பது 'ஒரு ஜனநாயக சூழ்நிலையில் பிரபாகரன் போன்ற தலைவர்களுக்கான தேவையோ இடமோ கிடையாது' என்ற உண்மை மட்டும்தான். இந்த உண்மையைப் புரிந்துகொண்டதால்தான் புலிகளும் அவ்வாறான தீர்வு ஒன்றை அணுகுவதில் அக்கறை கொள்ளாமல் இறுதித் தீர்வு தமிழீழம் தான் என்றுகொண்டிருக்கிறார்கள். –நன்றி: தாயகம் (கனடா)



22. வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தினப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளிமிடப்படுகிறது.

படிப்பகம்